

படப்பிடிப்பு—வியாஸ், தஞ்சை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திரன் செப்பேடுகள்.

(இம்மன்னனுடைய அரசாங்க இலச்சினையுடன் கூடிய வளையத்தில் சில செப்பேடுகளைக் கோத்து எடுத்த படம்.)

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௮	மலர்
	ஏவிளம்பி, ஆனி	
௩௩	1957 ஜூன், ஜூலை	௩

பொழிற் றொண்டர் கருத்துரைகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.

பண்டைத் தமிழக வரலாற்றை ஆராய்ந்தெழுதுவதற்குத் தமிழ் வேந்தர்கள் எடுப்பித்த திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களும், அவ்வரசர்களின் அறச் செயல்களைக் கூறும் செப்பேடுகளும் பெருந்துணை புரிவனவாகும். இதுவரை தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளில் 1949-ம் ஆண்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கிடைத்துள்ள செப்பேடுகள் மிகச் சிறந்தனவும் பெரியனவுமென வரலாற்றறிஞர் கருதுகின்றனர். இவ்வேடுகளைச் சங்கத்தார் அரிதின் முயன்று துலக்கிச் செப்பஞ்செய்தனர். இவைபற்றிய செய்தியினை உணர்ந்த இந்திய அரசாங்கத் தொல்லெழுத்துப் படிவத்தார் (Government Epigraphist for India) 11—3—1950ல் இவைகளை எடுத்துச் சென்று மைப்படிகள் எடுத்தனர். இப்படிகளும் செப்பேடுகளும் 1956-ம் ஆண்டு நம் சங்கத்திற்குத் திரும்ப அனுப்பப் பெற்றன. 'கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் இராசேந்திர சோழன் செப்பேடுகள்' என்ற பெயர் இச் செப்பேடுகளுக்குத் தொல்லெழுத்துப் படிவத்தாரால் அளிக்கப்பெற்றுள்ளது. இச் செப்பேடுகள் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றாராய்ச்சிப் பேராசிரியர் திரு. வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் வரைந்துள்ள முன்னுரை இம் மலரினை அணி செய்கின்றது. இவ்வாராய்ச்சியுரைகள் தொடர்ந்து வெளிவரும்.

பாராட்டு விழா.

பேராசிரியர் வீ. உலக ஊழியர் அவர்கட்கும், சித்தாந்த கலாநிதி பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கட்கும் உடையார்கோயில் கீழக்கோயிற்பத்து திரு K. அண்ணாமலைத் தென்கொண்டார், அருந்தவபுரம் திரு. உலகையாத்தேவர் ஆய இவர்களின் உறுதுணையாலும், பள்ளியூர் திரு. S. இராமையா மழவராயர் அவர்களின் முயற்சியாலும் தஞ்சை அம்மாப்பேட்டை சுற்றுவட்டப்

கிடங்கில் திருத்திண்டீச்சுரக் கல்வெட்டு வரலாறு.

வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார்,
ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

கிடங்கில் என்பது தென்னுர்க்காடு சில்லா, திண்டிவனம் தாலூகாவின் தலைநகராய் விளங்கும் திண்டிவனத்தின் பழம் பெயராகும். கடைச்சங்கம் மருவிய நூல்களில் ஒன்ருகிய பத்துப்பாட்டில் சிறுபாணுற்றுப்படையில் குறிக்கப் பெற்ற ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் வாழ்ந்த பதி இதுவே. இச் செய்தி "கிளைமலர்ப் படப்பை கிடங்கில் கோமான் தளையவிழ் தெரியல் தகையோன்" என்னும் அந் நூல் அடிகளாலும், அதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினுர்க் கினியர் "கிடங்கில் என்னும் ஊர்க்கு அரசனுகிய அரும்புநெகிழ்ந்த மாலையினை உடைய அழகை உடையோன்" என்று உரைத்த உரைப் பகுதியாலும் விளங்கும். இக் கிடங்கிலில் உள்ள கோயில் களின் கல்வெட்டுக்கள், இவ்வூரை ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கில் என்றே குறிப்பிடுகின்றன. கிடங்கில் என்பது திண்டி வனத்தின் பழம் பெயராயினும, இதுபொழுது திண்டிவனம் ரயில்வே நிலையத்திற்குத் தென்மேற்கே சுமார் அரை மைல் தூரத்திலுள்ள ஊர் கிடங்கில் என்னும் பெயராலே இக்காலமும் வழங்கப்பெறுகின் றது. இதற்கு வடக்கிலும், வடகிழக்கிலும் உள்ள பகுதியே திண்டி வனம் என்று வழங்கப்பெற்று வருகின்றது. எனவே, இக்கிடங்கில் சிறுபாணுற்றுப் படையில் குறிக்கப்பெற்றிருப்பதால், அந் நூல் தோன்றிய காலமாகிய கி-பி. இரண்டாம் நூற்ருண்டு,—அதாவது இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்ததாகும்.

[முதல் பக்கத் தொடர்ச்சி]

பெருமக்கள் 5—5—57 ஞாயிறன்று பொன்னுடைபோர்த்துப் பொற் பதக்கம் அணிவித்து வாழ்த்திதழ் வழங்கிப் பாராட்டினுர்கள்.

விழாவிற்கு மதுரை மீனுட்சி ஆலை உரிமையாளர் திரு. கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கியும் கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர் திரு. சி. வேதாசலம் பி. ஏ. பி. எல். அவர்கள் பொன்னுடை போர்த்துப் பொற்பதக்கங்களை அணிவித்தும் சிறப் பித்தார்கள்.

அதுபோது புலவர்கள் திரு. R. ஏகாம்பர நாட்டார், V.A. அரங்க சாமி, ந. இராமனுதன், K. சின்னையன், C. பாலசுந்தரம், K. சுந்தர மூர்த்தி, K. அப்பாராசன் ஆகியோரும் திரு. S. இராமச்சந்திர பத்தர் B. A., திரு. N. இராகவாச்சாரி B. A., திரு. S. மணவாளன் B. E., திரு. சிவராசன் ஆகியோரும் பேராசிரியர்களின் தமிழ்த் தொண்டு, பண்புநலன் ஆகிய சிறப்புக்களைப் பாராட்டிப் பேசி னுர்கள். அன்பர்கள் பலர் பாராட்டிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்

பொழிற்ருெண்டர்.

திண்டீச்சுரப் பெயர்க் காரணம்.

சிவபெருமானின் திருக்கோயில் வாயிற் காவலர் (துவார பாலகர்) ஆகிய திண்டி, முண்டி, என்னும் இருவருள் திண்டி என்பவரால் தாபித்துப் பூசிக்கப் பெற்றமையின் திண்டீச்சுரம் என்னும் பெயர்த்தாயிற்று. (மற்றவராகிய முண்டி என்பவர் பூசித்த தலம் முண்டீச்சுரம் என்பதும் இங்கு உணரத்தக்கது) ஈச்சுரம் = கோயில்

திண்டீச்சுரம்—இது ஒரு தேவார வைப்புத்தலம்.

தனக்கெனத் தனிப் பதிகம் இல்லாது, வேறு ஒரு தனிப்பதிகத்திலோ அல்லது பொதுப் பதிகத்திலோ வைத்துப் பாடப்பெற்றிருப்பது வைப்புத் தலமாகும். அம்முறையில், இத் திண்டீச்சுரம் திருநாவுக்கரசு சுவாமிகளால், அடைவு திருத்தாண்டகம் எட்டாம் பாசுரத்தில் "கோடீச்சுரங் கொண்டீச்சுரந் **திண்டீச்சுரங்** குக்குடேச்சுர மக்கீச்சுரங் கூறுங்கால்" என்று வைத்துப் பாடப் பெற்றிருப்தால் இது ஒரு வைப்புத்தலமாகும்.

இக் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள்.

இக் கோயிலில் முதலாம் இராச ராச சோழன், முதலாம் இராசாதி ராசன், வீரராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன் என்னும் சோழ மன்னர் காலங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கோயில் கட்டப்பெற்ற காலம்.

இக் கோயில் கர்ப்ப இல்லின் (The Central Shrine) தென்பால் தட்சிணாமூர்த்தி, மேல்பால் திருமால், வடபால் பிரமதேவர் இவர்களின் திருமேனிகள் இருப்பதால் இக்கோயில் பல்லவர் காலத்தில் கருங்கல்லால் கட்டப்பெற்றது என்பது உறுதி. மகாமண்டபம் புத்தன் இராசிங்கன் ஏவற்படி, வாகூர் சிவப்பிராமணன் திருமாங் கோயில் வாணகோவரையனால் கட்டப்பெற்றதாகும்.

இச்செய்தி இம் மகாமண்டபத்தின் தென்புறத்திலுள்ள கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.

---

* See the Annual Report on South Indian Epigraphy for the years—1900 Nos 141 — 145
1902 ,, 204 — 218
1905 ,, 30 — 35; and the South Indian Inscriptions Volume VII
Nos. 154 — 159
,, 831 — 833
,, 835 — 843.
Vol. III No. 83.

அக்கல்வெட்டுப் பின்வருமாறு :—

"சீராருந் தென்கிடங்கிற் றிண்டீச் சரத்தானுக்
கோராருங் கன்மண் டபமெடுத்தான்—பாராரும்
பொன்னனை பூமகள்சேர் புத்தன் இராசிங்க
னென்னனை ஆறையா ரேறு,

புத்தன் இராசிங்கன் ஏவத் திருத்திண்டீஸ்வரமுடையார் மண்டபம் செய்வித்தான் வாகூர் சிவப்பிராமணன் திருமாங்கோயில் வாணகோ வரையன்."

இறைவரின் திருப்பெயர்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருத்திண்டீஸ் வரதேவர், திருத்திண்டீஸ்வரமுடைய மகாதேவர், திருத்திண்டீஸ் வரமுடைய பரம சுவாமி, திருத்திண்டிவனமுடையார் என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனி.

இத்திருக்கோயிலில், முதலாம் இராதிராச சோழனின் இருபத் தெட்டாம் இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு, சேனபதிகள் மும்முடி சோழமாராசர் பள்ளிகொண்டார் அரையர் எழுந்தருளுவித்த சோமாஸ்கந்தர், ராஜாதிராஜவிடங்கர் இத்திரு மேனிகளுக்கு, ஒய்மாநாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கிலான மும் முடி சோழநல்லூர் ஊரார் இறையிலி தேவதானமாக நிலம் விற் றுக்கொடுத்த பரிசை உணர்த்துகின்றது. விடங்கர்க்கு ராஜாதி ராஜவிடங்கர் என்று பெயர் இருப்பதாலும், சோமாஸ்கந்தர், ராஜாதிராஜவிடங்கர் இவ்விரு திருமேனிகளும் முதலாம் இராசாதி ராசன் காலத்தில் அதாவது கி. பி. $1018+28=$ கி. பி. 1046இல் இங்கு எழுந்தருளுவிக்கப்பெற்றதாதல் வேண்டும்.

பிள்ளையார் கணபதியாரைப்பற்றிய குறிப்பு.

முதலாம் இராசராச சோழனின் பதினொன்றாம் இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு, சோழநாட்டுத் தென் கரை ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பேரார்க்காட்டு, ஆர்க்காடு கிழான் காடனை என்பான் உள்ளாலை கணபதியார்க்கு நாட்போனகத் துக்கு முருங்கைப் பாக்கத்தில் நிலம் வாங்கிவிட்ட செய்தியை உணர்த்துகிறது. எனவே உள்ளாலை அதாவது முதற் பிரா காரத்தில் இருக்கும் பிள்ளையார் மிகப் பழமையானவர் என்று பெறப்படுகின்றது.

அளிக்கப்பெற்ற நிவந்தங்களுள் சில.

முதலாம் இராசராச சோழன் காலத்தில் கிடங்கில் என்னும் இவ்வூரிலிருந்த கடம்புழான் தீர்த்தன் ஆதித்தன் என்பான், முருங் கைப்பாக்கத்தில், திருத்திவைத்த நிலம் வேப்பஞ் செறுவின் தெற்

கில் கண்ணுறு வரவை ஐந்தினல் குழி 1500. பாடிகாப்பான்பட்டிக்குக் கிழக்கும் வடக்கு மைக்கரைக்குத் தெற்கும் உள்ள குழி 600. புளியங்கொல்லையில் தீர்த்தனென்று திருத்தின செறுகுழி 810 ஆக 2910 குழிகளை, திருத்திண்டீஸ்வரதேவர்க்கு வீணை வாசிப்பானுக்கும், உடன்பாடுவான் ஒருவனுக்குமாக நிவந்தமாக அளித்திருந்தான்.

விக்கிரமசோழதேவரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் மணவில் மலை மதுராந்தகனான கலிங்கமான், திருத்திண்டிவனமுடையார்க்குத் திருமெய்ப்பூச்சுக்கும், தேவர்களுக்கு அமுதுக்கும், திருமஞ்சனத்துக்கும் உள்ளிட்டவைகளுக்கு அன்றுடு நற்காசு 120 ஐக் கொடுத்திருந்தான். அக்காசுகளைக் கிடங்கில் ஊரார் பெற்றுக்கொண்டு, தங்கள் ஊரில் தந்தியப்பன் ஏரிக்குக் கிழக்கேயுள்ள ஆறு வேலி நிலத்தைக் கொடுத்ததோடு, அந்த 120 காசில் இருபது காசை விலைப் பொருளாகவும் கொள்வதாக இசைந்துள்ளனர். [அன்றுடு நற்காசு—அப்பொழுது வழங்கும் நாணயம். The Current Coin]. சோழநாட்டுத் தென்கரை ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பேர் அரசூருடையான் ஆரூரன் உதைய திவாகரனை அருமொழி மூவேந்தவேளான், தான் பிறந்த மக நட்சத்திரத்தன்று, திருத்திண்டீஸ்வரமுடைய மகா தேவர்க்கு ஸ்நபநம் 108 கலசம் ஆடி அருளுவதுக்குத் தேன், நெய், பால், தயிர், எள், கடுகு, மஞ்சட் பொடி முதலிய ஸ்நபநத்திரவியங்களுக்கும், புடைவைக்கும், ஸ்நபநம் ஆடித் திருவமுது செய்யத் திருவமுது அரிசிக்கும், கறியமுதுக்கும், நெய்யமுது, தயிரமுது, அடைக்காய் அமுதுக்கும், பெருந்திருவமுதுக்கும், ஆக, கிடங்கில் பார்ப்பனப் பட்டியுடைய கிராஞ்சி காமக்கோடக் கிரமவித்தனிடை, சடையனூர்ப்பபடி என்று பேர் கூவப்படும் மூன்று பட்டி நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளான்.

கிடங்கிலைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு.

முதலாம் இராசராச சோழன் காலத்தில் இவ்வூர், ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கில் என்றும்; முதலாம் இராசாதிராசசோழன் காலத்தில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கிலான மும்முடிசோழநல்லூர் என்றும்; முதற் குலோத்துங்க சோழ தேவரின் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் ஓய்மா நாடான விஜய ராஜேந்திர வளநாட்டுக் கிடங்கிலான ராஜேந்திரசோழனல்லூர் என்றும்; இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது.

கிடங்கிலுக்குந் திண்டிவனம் என்ற பெயர் ஏற்பட்ட காலம்.

இக்கோயிலில் உள்ள விக்கிரமசோழதேவரின் (1120—1136) ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டில் முதல் முதலாகத் **திருத்திண்டிவனமுடையார் கோயில்** என்ற தொடர் காணப்பெறுவதால், ஊர் திண்டிவனம் என்னும் பெயர் போந்தமை புலப்படும். எனவே,

திண்டிவனம் என்னும் பெயர் வழக்கத்துக்கு வந்தது கி. பி. 1125-ஆம் ஆண்டாகும். அதாவது (1957—1125) இற்றைக்கு 852 ஆண்டுகள் ஆகின்றன.

பொதுச் செய்திகள்.

இக்கோயில் கல்வெட்டுக்களில் இவ்வூரில் **தந்தியப்பன் ஏரி, பெரியேரி** என்னும் இரு ஏரிகளின் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன. இவைகளன்றி இறையானூரில் **சிறறேரி** ஒன்றும் இருந்தது. முதலாம் இராசராசசோழன் காலத்தில், அரசாங்க அதிகாரிகள் திருக்கோயில்களுக்குச் சென்று, கோயில்களில் நித்திய நைமித்திகங்கள் முறைப்படி நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிப்பது உண்டு. இச் செய்திலய இக்கோயிலில் பொறிக்கப்பெற்று முற்றுப்பெருத கல்வெட்டு ஒன்று உணர்த்துகிறது.

அக்கல்வெட்டுப் பகுதி பின்வருமாறு:— "ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கிலே **அருமொழி மூவேந்த வேளார்** இருந்து இந்நாட்டு ஊர்களே அழைத்து வினவாவிருக்க, கிடங்கில் இறையான் கோயில் தேவகன்மிகள் வந்து இறையான் கோயில் தேவர்க்கு முன்புசெய்த சாஸனம் கெட்டமையால் இத் தேவர் தேவதானம் இறையனூர் ஊரார் எங்க......incomplete. (Ins. No. 483) என்பதாகும்.

திருத்திண்டீஸ்வரமுடைய மகாதேவர் திருஞாயிற்றுக்கிழமைகளில் புறம்பே ஸ்ரீபலி எழுந்தருளுதல் உண்டு. அதன் பொருட்டு நிவந்தம் அளிக்கப்பெற்றிருந்தது. ஸ்ரீபலி என்பது கோயிலில் நாடோறும் பலிபூசைக்காக எழுந்தருளப்பண்ணும் சிறு விக்கிரகம். [Tamil Lexicon]

இக்கோயிலுக்கு நந்தா விளக்குகளின் பொருட்டு ஆடுகள், பசுக்கள், இவைகள் விடப்பட்டிருந்தன. பொன்னும் விளக்கின் பொருட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அப்பொன் ராஜராஜன் மாடையால் நிறுக்கப்பெற்று வந்தது. ஈசூர்க் கோட்டத்து மன்ருடி, திண்டி ஆருளன் தன் கைப்பிழையால், கிடக்கைநாட்டு ஒகந்தூர் மன்ருடி சாமி நீத்தனுக்குப் பிரமாதம் விளைத்துவிட்டான். அதன் பொருட்டு, திண்டி ஆருளன் திண்டீச்சுரமுடையார்க்குத் திருநந்தா விளக்கு ஒன்று வைத்தற்குச் சாவா மூவாப் பேராடு 90 கொடுத்துள்ளான். இச் செய்தி அக்காலம் குற்றம் செய்தவர்களுக்குப் பரிகாரமாக நிகழ்ந்ததாகும். இக்கோயிலில் இருந்த சபையார் திருவுண்ணுழிகை சபையார் எனப் பெயர் பெற்றிருந்தனர்.

தாய்மை.

"ஒப்புரவு"

விண்ணப்பம்.

தாயே, எமைப்பயந்த சால்பே! உலகனைத்து
மேய வுயிர்த்திரளை மென்வயிற்றில்—ஏய
அடைத்துப், பிறப்பித், தளித்துணவு, காப்பாய்
படைத்துப் பெறுவேன் பயன்.

பெண்மை யாட்டம்.

1. சின்னதெனத் தள்ளிவைத்துப் போதி யோநீ
சிறுபொறியே பெருநெருப்பாந் திறலைக் கண்டும்?
உன்னியதி லுறைத்தான்ற பொருளைக் கண்டே
உலகுக்காம் நெறியெல்லாம் உரைக்க லாகும்;
பெண்ணியற்கை கண்டார்கள் பெருமை கண்டார்;
பேருலக மெல்லாமும் பெண்மை யாட்டம்
நன்மையெனிற் கடலாகும், தீமை யென்றால்
நானிலமோ வானகமும் நடுங்க வைக்கும்.

மூலைக்கையிலே பெண்.

2. சிறுமியரைக் குழுவாக்கிக் கல்வி தந்து
சீர்பெறுதல் பேரின்பம்; சிறிது மின்னி
உருமியிடித் திட்டாலோ சிதறு மெல்லாம்;
ஊர்விலங்குங் கான்விலங்கு மொக்க வைத்தல்
அருமையிலை, யிவர்பூசல் தீர்ப்ப தென்றால்,
அம்மம்மா, அறநூல்க ளனைத்துங் கற்றார்
வெறுமையெனத் தலைசோர்வார்; விரக ரம்மா
விண்மதியின் நன்முகத்து மெல்லி யாரே.

3. வளைகுலுங்கக் கைகோத்து, மலர்கள் சூடி,
வான்பிறந்த மின்புவியில் வந்தாற் போலே
நெளியார்ந்த விடையொளிர வாடிப் பாடி
நிற்பார்கள்; முல்லைநகை நீட்டு வார்கள்;
அளிவார்ந்த சொல்லாடி யிருப்பர்; இன்பத்
தருட்பாவின் சுவையென்னத் திளைக்குங் காலை
சுளிவாகு மொருமானின் முகந்தான்; ஆங்குச்
சூழ்ந்தபிற மானெல்லாம் சிதறிப்போகும்.

(தொடரும்)

சைவ சமய போதினி—நான்காம், ஐந்தாம் வகுப்புப் பாடப்பகுதிகள்.

சமய அறிவினை சிறுபருவந் தொடங்கியே பயிற்றுதல் வேண்டுமென்ற இலங்கை அரசியலாணைக்கியையவும், நல்லறிஞர் கருத்துக்கியையவும், எழுதப்பெற்றுள்ள இந்நூல்கள் பெரிதும் பாராட்டுக்குரியன. சிறுர் மனவளர்ச்சிக்கு ஒவ்வும் வகையில் படிமுறையாக எத்திறக் கல்வியும் பயிற்றுதல் வேண்டுமென்பது 'உள்ள இயல்' வல்லார் வகுக்கும் வழியாகும். அவ்வகையிலேயே, முதற் பகுதியில் சமய உண்மைகளைக் கதைகளின் வாயிலாகப் பதித்து, பின் சமய வாழ்வு வாழும் வழியினை இரண்டாவது பகுதியில் வகுத்துத் தெளிவாக எழுதியுள்ளமை கருத்து வளர்ச்சிக்கு ஏற்புடையதாகும். சிறுவர் வண்ண ஓவியங்களில் கருத்தைச் செலுத்திப் பயில்வதை நாம் நன்கு அறிவோம். இவ்விரு நூல்களும் நல்ல தாளில் கருத்துக்களை விளக்கும் பல அழகிய படங்களுடன், பெரிய எழுத்துக்களில், எளிதில் சிருரே பிறருதவியின்றிப் பயிலும் எளிய நடையில் அமைக்கப்பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது.

சமய வாழ்வு சமய அறிவை விடப் போற்றி வளர்க்கப் பெற வேண்டுவதாகும். இதனை வகுப்பறையில் நடத்தாது செய்கை முறைப் பாடங்களாக நடத்த வேண்டுமென்ற குறிப்பு வரவேற்றற்குரியது. நமது நாட்டுச் செல்வங்களுள், பெரும் பகுதி ஆலயங்கள். அவ்வாலயங்கள் வழி, கலையின் வளர்ச்சியினை நன்கு அறியலாம். சிற்ப, ஓவியக் கலைகளின் நுட்பமெல்லாம் ஒருங்கே, ஆலயங்களை அடுத்து வழிபடுகிறபொழுது எளிதாக உணரலாம். வழிபாடு, பயிற்சியாக அமைந்தால் மெல்ல பழக்கமாகத் திரிந்து பின் வாழ்வின் இன்றியமையாத கூருக ஊன்றிவிடும். பாடல்களைப் பண்ணேடு இசைத்தல் வேண்டும். திருநெறியதமிழ்னின்று சிருர்க்கென அபிநயப் பாடல்களும் சேர்த்துள்ளனர். இவை சிறுவர்தம் ஆற்றல்களை நல்ல வழிகளில் ஆற்றுப்படுத்தி உடல்—உள்ள —உயிர்—வளர்ச்சிக்கு அரண் செய்வதாகும்.

நமது தமிழகத்தில் சைவ இல்லங்கள்தோறும் இந்நூல்கள் சிருரைச் செந்நெறிப்படுத்தப் பயன்படுதல் வேண்டும். சமயச்சார்பற்ற நடுவுநிலைமை வகிக்கும் நாடாக நமது இந்தியப் பேரரசு விளங்குகின்றதால் அரசியலார் சமயக்கல்வி வளர்க்கும் பணியில் ஈடுபடுவதற்கில்லை. ஆதலால் பெற்றேர், தம்மக்கட்கு முறையான சமயக்கல்வி பயிற்ற இந்நூல் வரிசை பெரிதும் துணை செய்யும். தமிழகம்,—சைவ உலகம் இத்தகைய முயற்சிகளுக்கு ஆக்கம் தந்து வளர்க்கக் கடமைப்பட்டுள்ளது.

சுன்ஞகம் வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பக வெளியீடுகளாக இவை அமைந்துள்ளன. சைவப் பெரியார் திரு. சு. நடேசபிள்ளை B. A., B. L., F. R. E. S. அவர்கள் அளித்த அணிந்துரை நூலினை மிக்கச் சிறப்புக்குள்ளாக்குகின்றது. பதிப்பகத்தின் முயற்சி மென்மேலும் பெரும்பயன் விளைத்து நமது நாட்டுச் செல்வங்களாய சிருர்தம் வாழ்வு செவ்விய வாழ்வாகத் துலங்க மன்றுளாடியை வழுத்துகிறேன். **சி. இராமலிங்கம்.**

கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடுகள்.

T. V. சதாசிவப் பண்டாரத்தார்.

நம் தமிழகத்தில் முற்காலத்தில் அரசாண்ட சேர சோழ பாண்டியர்களும் பல்லவர்களும் திருக்கோயில்களுக்கும் அந்தணர்க்கும் பிறர்க்கும் இறையிலியாக நிலங்கள் வழங்கும்போது தம் அறச்செயல்கள் என்றும் நின்று நிலவுமாறு அவற்றைச் செப்பேடுகளில் வரையச்செய்து தம் அரசாங்க முத்திரையுடன் உரியவர்களுக்கு அளிப்பது வழக்கம். அவர்கள் அங்ஙனம் செய்யுங்கால், அச்செப்பேடுகளில் தம் முன்னோர் வரலாற்றோடு தம் வீரச் செயல்களையாதல் தம் மெய்க் கீர்த்தியை[1] யாதல் முதலில் எழுதுவித்துப் பிறகு அப்போது தாம் செய்த அறச்செயலைத் தெளிவாகக் குறித்திருத்தல் காணலாம்.

அத்தகைய செப்பேடுகளுள், நானூற்று முப்பது ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற பிற்காலச் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் அறவோலை செய்து அதுபற்றி வரைந்து வழங்கிய செப்பேடுகள் பலவாதல் வேண்டும். அவைகள் காலப்போக்கில் ஏற்பட்ட ஆட்சி மாறுதல்களால் இந்நாளில் கிடைக்காமற்போயின. கோயில்களிலிருந்த செப்பேடுகளுள் பல, உருக்கி விற்கப்பெற்றும் செப்புப் பாத்திரங்களாக மாறியும் போயின. அறியாமையால் நிகழ்ந்த அத்தகாத செயல்களால் மறைந்தொழிந்த வரலாற்றுண்மைகளும், அரிய செய்திகளும் அளவிட்டுரைக்கத் தக்கனவல்ல. எனினும், நிலத்திற் புதையுண்டு பல ஆண்டுகள் மறைந்துகிடந்த செப்பேடுகளுள் சில இக்காலத்தில் ஆங்காங்கு அரிதிற் கிடைத்து நம் நாட்டின் உண்மை வரலாற்றை அறிந்து எழுதுவதற்குப் பயன்பட்டுவருதல் ஓரளவு மகிழ்ச்சி அளிக்கின்றது. அச் செப்பேடுகள், கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றபோதும் பொதுமக்கள் இல்லம் முதலியன அமைத்தபோதும் நிலத்தை அகழ்ந்த ஞான்று எதிர்பாராத நிலையில் அகப்பட்டவையேயாம்.

இதுகாறும் கிடைத்துள்ள சோழ மன்னர்களின் செப்பேடுகளுள் வரலாற்று ஆராய்ச்சிக்கு உறுதுணையாய்ப் பெரிதும் பயன்படுவன நான்காகும். அவை, சுந்தர சோழனின் (கி. பி. 957—970) அன்பிற் செப்பேடுகள், முதல் இராசராச சோழனின் (கி. பி 985—1014) ஆனைமங்கலச் செப்பேடுகள், முதல் இராசேந்திர சோழனின் (கி. பி. 1012 — 1044) திருவாலங்காட்டுச் செப்பேடுகள், வீரராசேந்திர சோழனின் (கி. பி. 1063—1070) சாராலச் செப்பேடுகள்

---

[1] மெய்க்கீர்த்தி என்பது பேரரசனுடைய மெய்ப் புகழையும் வரலாற்றையும் சிறப்புப் பெயர்களோடு இயற் பெயரையும் மாதேவியரின் பெருமையையும் ஆட்சியாண்டையும் கூறும் பல அடிகளாலமைந்த ஒரு செய்யுள் ஆகும், இது பெரும்பான்மை அகவலோசையும் சிறுபான்மை கலியோசையுங் கொண்டமைந்தது. தமிழ் வளம் நிறைந்த இம்மெய்க்கீர்த்திகள் எல்லாம் அவ்வவ் வேந்தர்களின் அவைக்களப் புலவர்கள் பாடியனவேயாம்.

என்பன. அவற்றுள், சுந்தர சோழனுடைய அன்பிற் செப்பேடு களே மிக்க தொன்மை வாய்ந்தவையாகும்.

பல ஆண்டுகளாகத் தமிழ்த் தாய்க்கு அருந் தொண்டுகள் ஆற்றிவரும் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கிடைத்துள்ள செப்பேடுகளின் தொகுதி, முதல் இராசராச சோழனுடைய அருமைப் புதல்வனும் கி. பி. 1012 முதல் 1044 வரையில் சோழ இராச்சியத்தில் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து சோழர் பேரரசை யாண்டும் பரப்பிக் கங்கைகொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயருடன் அரசாண்டவனும் ஆகிய முதல் இராசேந்திர சோழன் தன் ஆட்சியின் எட்டாம் ஆண்டாகிய கி. பி. 1020ல் அளித்ததாகும். எனவே, இஃது ஏறத்தாழத் தொள்ளாயிரத்து முப்பத்தேழு ஆண்டுகட்கு முன்னர் வரையப்பெற்றதாதல் வேண்டும். இதனுல் பண்டைச் சோழ மன்னர்களின் வரலாற்றையும், முதல் இராசேந்திர சோழனுடைய வீரச் செயல்களையும், பெருங் கொடைத் திறத்தையும், சோழர்களின் அரசியல் முறைகளையும், பதினொன்ரும் நூற்ருண்டில் நிலவிய ஊர்கள் ஆறுகள் கால்வாய்கள் முதலானவற்றின் உண்மைப் பெயர்களையும், அக்கால வழக்கங்களையும் மற்றும் பல அரிய செய்திகளையும் இதனுல் நன்கறிந்துகொள்ளலாம். மேலே குறிப்பிட்ட நான்கு செப்பேடுகளிலும் காணப்படாத சில அரிய வரலாற்றுச் செய்திகள் இதில் சொல்லப்பட்டிருத்தல் உணரற்பாலதாகும்.

இத்தொகுதி ஐம்பத்தைந்து செப்பேடுகளையுடையது. இது, வலிமையுள்ள செப்பு வளையத்தில் கோக்கப்பெற்றிருப்பதோடு தாமரைப் பூ வடிவில் அமைந்த பீடத்தின்மேல் முதல் இராசேந்திர சோழனுடைய வட்ட வடிவமான அரசாங்க முத்திரையையும் உடையது; வடமொழிப்பகுதி, தமிழ்ப் பகுதியாகிய இரண்டு பகுதிகளைத் தன்னகத்துக்கொண்டது. இவற்றுள், முதலிலுள்ள வடமொழிப் பகுதி மிகச் சுருங்கியதும் அதன் பின்னுள்ள தமிழ்ப் பகுதி மிக விரிந்ததுமாகும். வடமொழிச் செப்பேடுகள் மூன்றுள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் $16\frac{1}{2}$ அங்குல நீளமும் $9\frac{1}{2}$ அங்குல அகலமும் உடையது. எஞ்சிய தமிழ்ச் செப்பேடுகள் ஐம்பத்திரண்டினுள் முதல் இருபத்தொன்று $16\frac{1}{2}$ அங்குல நீளமும் 9 அங்குல அகலமும் உடையன; மற்றச் செப்பேடுகள் நீளத்திலும் அகலத்திலும் சிறிது குறைந்துள்ளன. இது, முதல் இராசேந்திர சோழன் கி. பி. 1020ல் சோழ மண்டலத்தில் ஐம்பத்தோர் ஊர்களைத் திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயருடன் ஒன்ருக்கி, வேதங்களிலும் சாத்திரங்களிலும் வல்ல அந்தணர் பலர்க்குப் பிரமதேயமாக வழங்கிய நிகழ்ச்சியைத் தெரிவிப்பதாகும். இதில் அவ்வூர்களின் பெயர்களும், நான்கெல்லைகளும், விளை நிலங்களின் கணக்கும், அவற்றிலிருந்து வருவாயாக ஆண்டுதோறும் கிடைக்கவேண்டிய நெல்லும் காசும், அவற்றைப் பெறுதற்குரிய அந்தணர்களின் ஊர்களும் பெயர்களும் பங்குகளும், விளக்கமாக வரையப்பட்டுள்ளன. அவ்வூர்களிலிருந்து ஆண்டுதோறும் அன்னோர் பெறும் நெல் ஐம்பத்தோரா

அடுக்குமொழி

சு. கு. அருணாசலனூர்
அறுவை வணிகர் அம்மாப்பேட்டை, சேலம்.

அறிஞர், கலைஞர், நாவலர், கவிஞர் (பாவலர்) என்று தமக்குச் சிறப்புப் பெயரிட்டுக்கொண்டார் சிலர் அடுக்குமொழியில் யாமே பேசுவேம், பிறர்க்கு அதுவாயாது என்று கூறுவர். இதனைச் செய்தித்தாள் படிப்போரனைவருமறிவர். இவர் மோனை, எதுகைத் தொடைபடச் சில பேசுவர். இவர் இதற்காக ஆட்சியில்லாத வட சொல், ஆங்கிலம், இந்துத்தானி, உருது முதலிய சொல்லையும் மிகப்பலவாகக் கலந்து பேசுவர். இதுவா தமிழ்பேணல்! இவர்தாம் அங்ஙனம் பேசுவதை 'அடுக்குமொழி' என்பர். இவர் அடுக்கு மொழி என்பது இன்னது என்பதும் தொடை என்பது இன்னதென் பதும் அறியாததாலே இங்ஙனம் பிதற்றுகின்றுரென்பது எம் உரை உரைக்கவே விளங்கும். சிலர் பாவலரென்று தமது சிறப்புப் பெயரையும் தமிழில் வைத்துக்கொண்டாரில்லை. இவர் யாத்த செய்யுட்களில் பிழை மலிந்துள்ளன.

செய்யுட்கு உறுப்பாம் இருபத்தாறுள் (தொல், செய். க) யாப்பிலக்கணப் பகுதியாகிய தொடை வகையும் ஒன்று. இது செய்யுட்கே மிக இன்றியமையாததும் சிறப்பானதுமாம்.

"அடியுள்ளனவே தளையொடு தொடையே" (செய். சுசு) என்பதினுல் தளையும் தொடையும் அடியின்கண்ணென அவற்றிற்கு இட முணர்த்தியவாறு கண்டுகொள்க. இதற்குக் "கட்டளைப்படுப்பதூஉம் தொடையுறழ்தற்கு இடனுவதூஉம் நேரடியேயெனச் சிறப்பித்தவாறு" எனக் கருத்து உரைப்பர் பேராசிரியர். உயர்ந்தோருடைய (புலவர்) செய்யுளோடொத்த உரைநடையில் தொடை வகை காணப்படுவதன்றிப் பொதுமக்கள் உரைநடையில் காணப்படா. தொடை வகையென்றது எழுத்துச் சொற்பொருள்களை எதிரெதிர் நிறீஇத்தொடுக்கின்ற தொடைப்பகுதிகளை. இதனை "அடியிரண்டு தொடுத்துமன் சேறலிற்றெுடையே" (இலக்கண விளக்கம் எகக) என்பதனுலறிக. மன்னென்ற மிகையானே ஓரடிக்கண்ணவாகிய தொடை வேறுபாடு (விகற்பம்) ங்கொள்க.

(74ம் பக்கத் தொடர்ச்சி)

யிரத்தைம்பது கலமும் காசு முப்பத்திரண்டரையுமாகும் என்பது இதனுல் நன்கறியக்கிடக்கின்றது.

பேரும் புகழும் படைத்துத் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கிய முதல் இராசேந்திரசோழன், இவ்வறத்தைத் தன் தாயாகிய திரிபுவனமாதேவியின் பெயரால் செய்துள்ளமை, இப்பெருவேந்தன் தன் தாயிடத்தில் கொண்டிருந்த பேரன்பினை இனிது புலப்படுத்துவதாகும்.

மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகையென்ப" (தொல். செய். அஎ)

என்பதால் தொடை நான்கு வகைப்படுமென்பதறிக.

"அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை" (ஷ௯௧)
பொருள்: அடிதொறும் தலையெழுத் தொன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாம்.

"அஃதொழித் தொன்றின் எதுகையாகும்" (ஷ௯௨)
பொருள்: அடிதொறும் முதலெழுத்தொன்ருமல் இரண்டாமெழுத்தொன்றின் எதுகையாகும். அஃதேல் முதலெழுத்துமொன்றி இரண்டாமெழுத்து மொன்றில் யாதாகுமெனின், முந்துற்ற மோனையாற் பெயரிட்டு வழங்கப்பெறும்.

"ஆயிரு தொடைக்கும் கிளையெழுத்துரிய" (ஷ௯௯)
பொருள்; முற்கூறிய மோனைக்கும் எதுகைக்கும் கிளையெழுத்துக்களும் ஒன்றிவரப்பெறும்.

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே" (ஷ௯௯)
பொருள், அடிதொறும் வந்த சொல்லினுனுதல் பொருளினுனுதல் மாறுபடத்தொடுப்பது அடிமுரண்டொடையாம். இஃது (முரண்) ஐந்து வகைப்படுமாற்றைப் பேராசிரியருரையானுணர்க.

"இறுவா யொன்ற லியைபின் யாப்பே" (ஷ௯௫)

பொருள்: அடிதொறும் ஈற்றெழுத்தொத்துவரின் அஃது இயைபுத் தொடையென்று சொல்லுவர். இவற்றுடன் (மோனை முதலிய தொடைவகை) அளபெடை, பொழிப்பு, ஒரூஉ செந்தொடையென இவையுமுளவென்பர் தொல்காப்பியர். (செய். அஅ, அ௯)
இரட்டைத்தொடை யென்பது ஒரு சொல்லே நான்கு சீருமாகிவரும் காட்டு. "ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்"
(யாப். காரிகை மேற் ௧அ)

மோனைத் தொடையும் எதுகைத் தொடையும் இசையுற அமைந்த (உரை) நடையினைப் பண்டை உரையாசிரியர் உரைகளிலே பரக்கக் காணலாம். காட்டு:- "கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயின் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவை (ஓவியம் என்றும் பாடம்) போலவும் பாயிரம் நூற்கு இன்றியமையாதது". இன்னும் "இந்நூல் செய்தார் யாரோவெனின், மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர்சோதி அருமறைக் கடவுளென்பது" (இறையனுர் அகப்பொருள் நூற். க. நக்கீரர் உரை) இக்காலத்தும் இந்நடை அமைய எழுதுவோர் பலர்.

இனி அடுக்கு என்றால் என்ன என்பதைக் காண்போம்.

"இசைப்படு பொருளே நான்கு வரம் பாகும்" (சொல் ௪௨௩)

விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும் (டி ௩௨௪)

பொருள். ஒருசொல்லடுக்கினுள் (ஒருமுறை வருவது அடுக்கன்மை யின், ஒருசொல் அடுக்கு எனவே இருமுறை அடுக்கினமை பெறு தும்.) இசை நிறையடுக்கு நான்காகிய வரம்பையுடைத்து; பொரு ளொடு புணர்தற்கண் விரைவு பொருள்பட அடுக்குவது மூன்றாகிய வரம்பையுடைத்து. "வரம்பாகுமென்றது அவை நான்கினும் மூன் றினும் இறந்துவாராக் குறைந்து வரப்பெறுமென்றவாறு". காட்டு. "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" (யாப் வி. நூற். 51 உரை மேற்.) எனவும், "தீத்தீத்தீ" எனவும் வரும். அவை மும் முறையானும் இருமுறையானும் அடுக்கி வருதல் இவற்றைக் குறைத்துச் சொல்லிக் கண்டுகொள்க. இசைப் பொருளாவது செய்யுளின்பம். விரைவிக்கும் சொல்லை விரை சொல்லென்றார். அசைநிலை இருமுறையல்லது அடுக்காமையின் அதற்கெல்லை கூறா ராயினர். அஃதிருமுறையடுக்குமென்பது யாண்டுப் பெற்றாமெனின், அடுக்குமென்பதனாற் பெற்றாம். ஒருமுறை வருவது அடுக்கெனப் படாமையினென்பது" என்பர் சேனாவரையர். இதனால் 'அடுக்கு' என்பதனிலக்கணமறிக. 'அடுக்கிய கோடி' (குறள் ௯௫௪, ௧௦௦௫) என்பதற்குப் பலவாக அடுக்கிய கோடி எனப் பரிமேலழகர் பொரு ளெழுதுவார்.

ஒருசொல்லடுக்கு இசை நிறையும் அசைநிலையும் விரைவு முதலிய பொருள் வேறுபாட்டோடு புணர்வதுமென மூன்று வகைப் படும். அஃது "இசைமுறை யசைநிலை பொருளொடு புணர்தலென் றவை மூன்றென்ப வொருசொல்லடுக்கே" (சொல். ௪௧௧) என்ப தாலறிக. இவ்வடுக்குப் பெயர், வினை, இடை என மூன்று சொற் களிலும் நிகழும். 'ஏஏஏஏ அம்பல் மொழிந்தனள்' என்றது இசைநிறை. 'மற்றோ மற்றோ'; அன்றே அன்றே' என்பன அசைநிலை. பாம்பு பாம்பு—விரைவு. அவன் அவன்—துணிவு. (நடைபெற்ற ஒரு செயலைச் செய்தவன் யார் என்று ஐயுற்று ஆராயுமிடத்து அறிந்தவன் 'அவன் அவன்' என்பது துணிவு.) வைதேன் வைதேன்—உடன்பாடு. (ஒருவன் மற்றொருவன் தன்னை வைதான் என்று கேள்வியுற்று அவனிடம் சென்று 'என்னை வைதாயா' என்று வினவிய வழி வைதவன் "வைதேன் வைதேன்" என்று கூறுவது உடன்பாடு.) உண்டு உண்டு போம் ஒரு தொழில் பலகால் நிகழ்தல். ஒரு தந்தையிடத்தில் அவன் மகனைப்பற்றி வினவுவார்க்கு அத்தந்தை வெறுப்புற்றுக் கூறும் போது "உண்டு உண்டு போவான்" என்று கூறுதலியல்பு. (குடும்ப அலுவல்களைக் கவனிப்பதில்லை. சாப்பிட்டுச் சாப்பிட்டுப் போகிறான் என்ற கருத்தில் இவ்வாறு கூறுதலியல்பு) இங்கு ஒரு தொழில் (உண்டற்றொழில்) பலகால் நிகழ்தல் காண்க. அடுக்கு

ஒரு சொல்லது திரிபு (விகாரம்). இரு சொல்லாயின் இருபொருள் உணர்த்துமன்றி விரைவு முதலிய இவ்வேறுபாடுகளை உணர்த்தாது.

அடுக்கின் வகைக்குச் சில காட்டுக்கள் தருவாம். "பல்சான்றீரே" பல்சான்றீரே (புறம் கக௫) "கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே" (புறம் உஉஅ) "சென்றன சென்றன, வந்தது வந்தது" (நாலடி ச) "என்னே மற்றென்னே நீர் மொழிந்ததென்னே" (சிந். கஅஅகூ) "கேண்மின் கேண்மின்கள் யாவரு மினியன" (ஷை உ௬அகூ) இவை விரைசொல்லடுக்கு.

"புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்" (சிலம்பு கள: உஅ) அடுக்குப் பன்மைபற்றி நின்றது. "நின்றன நின்றன; "ஒன்றின் ஒன்றின்" அடுக்கு மிகுதிப் பொருள். "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" அடுக்குச் சிறப்பின் கண் வந்தது. தொல்காப்பியர் அசை நிலை அடுக்கைக்

"கண்டீர் என்ரு கேட்டீர் என்ரு
சென்ற தென்ரு போயிற் றென்ரு
அன்றி அனைத்தும் வினுவொடு சிவணி
நின்றவழி அசைக்குங் கிளவி என்ப. (எச்சவியல் உகூ)

கேட்டை என்ரு நின்றை என்ரு
காத்தை என்ரு கண்டை என்ரு
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பாகும்மே" (ஷை ௩0)

என்னும் நூற்பாக்களிலே விதந்து உரைப்பர். கட்டுரையகத்து (பேச்சிடத்து) ஒருவன் ஒன்று சொல்லிய வழி அதற்குடம்படாதான் "கண்டீரே கண்டீரே" என்னும். கண்டீரே என்பதில் கண்டீர் என்னும் வினைச்சொற் பொருண்மையும் ஏகாரத்திற்குரிய வினுப் பொருண்மையுமின்மையின் "கண்டீரே கண்டீரே" என்பது அசை நிலையாயினவாறு கண்டுகொள்க. இஃது (கண்டீரே கண்டீரே) இக்காலத்துப் "பார்த்தீரா, பார்த்தீரா" என வழங்குகின்றது.

அடுக்குச் சிறிது வேறுபாட்டுடனும் வரும்.

"அவைதாம் (முற்றுச் சொல்தாம்)
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே" (எச். ௩௩)

என்புழித் தொல்காப்பியர் அடுக்கென்பது தம்பாற் சொல்லோடு ஒருகாலத் (Tense) திற்கேற்ற வினையே அடுக்குவது என்பதுணர்த் தத் 'தத்தம் கிளவி' என்ருர். எனவே வினைமுற்றென்னும் ஒரே இலக்கணவகைச் சொல் (வினைமுற்றுத் தத்தமக்குரிய வாய்பாடுகள்) பலவாய் அடுக்கிவரினும் அடுக்கெனத் தொல்காப்பியர் கருதினு ராதல் வேண்டும். காட்டு; உண்டான் நின்ருன் ஓடினுன் பாடி

ளுன் சாத்தன்—வினைமுற்று அடுக்கி வந்தது. நல்லன் அறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன் — வினைக்குறிப்பு அடுக்கி வந்தது. "நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேளலறச் சென்றான்" (நாலடி உகூ) என முற்றுச் சொற்கள் அடுக்கிப் பெயர் வெளிப்படாது நிற்றலும் கொள்க. நின்றான் முதலிய முற்றுச் சொற்கள் அடுக்கு ('ஒரு மாந்தன்' என்னும் பெயர்கொண்டு முடிந்தன.) மொழி நூலில் கொளுவு நிலை அல்லது ஒட்டு நிலை (Agglutinative) மொழியைக் காணலாம். காட்டு: நடத்து நடத்துவி (Dravidian Comparative Grammar, University of Madras 1956. Introduction Affiliation of Dravidian Languages Page 64) திரவிட மொழிகள் ஒட்டு நிலையிலுள்ளன. பெயர், வினைச்சொற்களோடு உருபுகள், ஈறுகள், காலங்குறிக்குஞ் சொற்கள் (இடை நிலைகள்) எதிர்மறை குறிப்பன (ஈறு) முதலியன சேரும் போது உருவஞ்சிதையாமல் நிற்குமாயின் கொளுவு நிலை அல்லது ஒட்டுநிலை எனப்படும். அதனை (கொளுவுநிலை) அடுக்கியல் என சிலர் மொழிபெயர்த்துக் காட்டினர். இதுவும் பிழையாதல் மேலுரைத்தமை கொண்டறிக. அடுக்குமொழி என்பதனை இன்னதென அறியாதார் முன்னுமுளர் என்பதை இதனானுமறிக.

இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்குமுள்ள வேறுபாடு என்னையோ அறிதல் வேண்டினேனென்பையாயிற் காட்டுதும், சுருசுருத்தது, மொடுமொடுத்தது என இசை (ஓசை) பற்றியும், மொறுமொறுத்தார் எனக் குறிப்புப் பற்றியும் குறுகுறுத்தது கறுகறுத்தது எனப் பண்புபற்றியும் இரட்டித்து வந்தன பிரிந்து நில்லாமை கண்டுகொள்க. குறுகுறுத்தது என்பது குறுத்தது குறுத்தது எனப் பிரிந்தும் வந்ததாலெனின் அங்ஙனம் வாராது. ஏனெனின் குறுகுறுத்தது என்பது மிகக் குறுத்தது என்னும் பொருளில் வருதலின் குறுமிகுதியுணர்த்தக் குறுத்தது என்பது குறுமையையுடையது என்னும் பொருளில் வருதல் வேண்டும். குறு மிகுதிப் பொருளுணர்த்தாமையின் குறுகுறுத்தது என இரட்டையாய் (ஒரு சொல்லாய்) நின்றே மிகக் குறுத்தது என்னும் பொருளை உணர்த்துமென்றறிக. அதனாற்றான் அக்குறுமை மட்டும் உணர்த்தி நிற்பது அதனின் வேறுமென்பது. கறுகறுத்ததென்பதுக்கும் ஈதொக்கும். கறுத்தது கறுத்தது குறுத்தது குறுத்தது எனச் சொன் முழுவதும் இருமுறை வாராமையின் அடுக்கன்மை அறிக. ஈண்டிரட்டைக் கிளவியென்றது மக்களிரட்டை, விலங்கிரட்டைபோல வேற்றுமையுடையனவற்றையன்றி இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றையென்றுணர்க. எனவே அடுக்குத் தொடர்ச்சொல் தனித்துவரும்; இரட்டைக்கிளவி தனித்துவராது, இரட்டித்தே வரும்; பிரிந்திசைப்பின் இரட்டைக் கிளவிப் பொருள்கெடும். "இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா" (சொல். சஅ) என்பது தொல்காப்பியம். இஃது இரட்டிப்பாலேயே பொருள் சிறந்து நிற்றல் காண்க. அடுக்குத்

தொடர்ச்சொல் நான்கு முறைவரை அடுக்கிவரும். இரட்டைக் கிளவி இருமுறைக்குமேல் வராது.

அடுக்குமொழியாலாய பயன் முன்னரே ஆண்டாண்டுக் குறிக்கப்பட்டது. பேசுவோனுக்குத் திடீரென்று ஓர் உணர்ச்சி ஏற்படக் கேட்போனுடைய கவனத்தை ஈர்த்து அவனுக்கு உணர்த்த விரும்பும்போது "அடுக்குமொழி" பயன்படும். அப்போது அவன் சொற்றொடரில் முன்னும் பின்னும் சொற்களமைக்காமல் ஒரு சொல்லையே திரும்பத் திரும்ப இருமுறை மும்முறை பலமுறை கூறுவான். காட்டு. (அச்சம்பற்றிப்) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ. கூட்டத்தின் அமைதியைக் காத்ததற்காகத் தலைவர் பெயர் சொல்லிப் "பெரியார் வாழ்க பெரியார் வாழ்க" என்றல். பெரியார் பேருக்கு இழுக்கு நேரா வண்ணம் அமைதியாக இருக்க எனக் கூட்டத்தினரை வேண்டிக் கோடற்பொருள்பட்டவாறு கண்டுகொள்க. "தமிழ்வாழ்க தமிழ்வாழ்க" என்பதும் அது. தமிழன் உயர்ந்த குறிக்கோளுடையவன். அப்பெருமைக்கு இழுக்கு நேராவண்ணம் கூட்டத்தினர் அமைதியைக் காக்க என அது பொருள்பட்டவாறறிக.

உரைநடையில் எதுகை மோனை காண்போமாயின் பொருளுணர்ச்சி கெட்டுவிடும்; காலக் கேடுமாம். எனவே வடசொற்களை வரம்பின்றி வழங்குவது வழுவாகும். 'எங்களூர் பெங்களூர்' என்றாற்போலும் ஒரோவிடத்து இயற்கையாய் அமையும் மோனையெதுகைகள் உரைநடையில் விலக்கப்படா. செய்யுள் போன்றே மோனை எதுகை அமைத்து வரைந்த சில உரைநடை நூல்களும் உளவேனும் அவை செய்யுளைப் பின்பற்றினவேயன்றி உண்மையான உரைநடையாகா.

ஓசை, வண்ணம் என்னும் இசைவரம்புகளும், சீர், அடி, பா முதலிய உறுப்பு வரம்புகளும், மோனை, எதுகை முதலிய தொடை நயங்களும் மடக்கு, சொற்பின் வருநிலையணி முதலிய சொல்லணிகளும், செய்யுள் மரபான சில சொல் வழக்குகளும் உரைநடையில் அமையா. ஓசைக்கும் பொருளுக்குமுள்ள ஒன்றிய இணைப்பும், கேட்டார்ப்பிணிக்குந்தகைய மந்திரவாற்றலும் செய்யுட்கேயுரிய. இவற்றால் உரைநடையிற் காட்டக்கூடிய உணர்ச்சி செய்யுளிற் பன்மடங்கு வலியுறுகின்றது. எனவே உரைநடை, சொல்லாட்டு (சம்பாசனை) சொற்பொழிவு முதலியவற்றில் எதுகை மோனைக்காக வரம்பின்றி வேண்டாத பிறமொழிச் சொற்களை வழங்கவேண்டியதில்லை. எதுகை மோனைக்காக இடர்ப்படுவதெற்றுக்கு? தமிழர் யாவரும் கட்டுரையைத் தமிழில் எழுதவேண்டுமல்லது தொடை நயத்திற்கும் வேண்டாத பிறமொழிச் சொற்களை வழங்கல் வேண்டாம்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

திருமுறைகண்ட புராணத்திற் கூறியுள்ள தேவாரப் பண்களின் கட்டளை விளக்கம்.

V. S. கோமதிசங்கர ஐயர்,
(வீணை விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.)

பதிப்புரிமை ஆசிரியர்க்கே.

ஆகவே ஞானசம்பந்த சுவாமிகளின் நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், நட்டராகம், செவ்வழி, காந்தார பஞ்சமம், கொல்லி, கௌசிகம், பஞ்சமம், சாதாரி, அந்தாளிக் குறிஞ்சி முதலிய பதினேழு(17)பண்களுக்கும் அறுபத்துமூன்று (63) கட்டளைகள் (இராகங்கள்) வருகின்றன. இவற்றுள் அப்பர்-சுந்தரர் இவர்களின் கட்டளைகள் அடங்கிவிடுகின்றன. அப்பர் சுவாமிகளின் நேரிசை-விருத்தம் – குறுந்தொகை – தாண்டகம் முதலிய நான்கு கட்டளைகளும் அப்பருக்கே உரியவைகளாகும். மற்ற இருவர்களுக்குமில்லை. சுந்தரரின் தக்கேசி-புறநீர்மை முதலிய எட்டுக் கட்டளைகளுள் சம்பந்தர் அப்பர் இவ்விருவர் களின் கட்டளைகளும் அடங்கிவிடுகின்றன. பழம்பஞ்சுரம்-செந்துருத்தி முதலிய மூன்று கட்டளைகளும் சுந்தரருக்கே உரியனவாகும். மற்ற இருவர்களுக்கும் இல்லை. சுந்தரருக்கு சம்பந்தருக்குரிய பழந்தக்கராகம்-வியாழக்குறிஞ்சி-மேகராகக் குறிஞ்சி-செவ்வழி-சாதாரீ-அந்தாளிக்குறிஞ்சி முதலிய ஆறு பண்களும் அதற்குரிய கட்டளை இராகங்களும் அறவே இல்லை. இவைகளெல்லாம் செல்லுக்கிரையான பதிகங்களோடு மறைந்து விட்டனவாயிருக்கலாம். இவ்விவரங்கள் கட்டளை விளக்கப் பட்டியலில் தெளிவாகக் கண்டுகொள்க.

(1) பண் நட்டபாடைக்கு மொத்தம் எட்டுக் கட்டளைகள். நட்டபாடை, சாளரபாணி, தக்கணுதி, அந்தாளிபாடை, தனுக் காஞ்சி, ஆரியகுச்சரீ, சுருதி காந்தாரம், கொல்லிவராடி என்ப வற்றில் முதல் நான்கு பண்களும் தமிழ்நாட்டு இராகங்கள். இவைகளின் தற்காலப் பெயர்களாவன: 1. நட்டபாடை-நாட்டை; 2. சாளரபாணி – ஆனந்தபைரவி; 3. தக்கணுதி-சங்கராபரணம்; 4. அந்தாளி பாடை-கமாஸ். இந்த நான்கு இராகங்களிலும் சம்பந்தரின் நட்டபாடைப் பதிகங்களையும், முதல் இராகத்தில் அப்பரின் பதிகத்தையும், முதலிரண்டு இராகங்களில் சுந்தரரின் பதிகங்களையும் பாடவேண்டும். மற்ற நான்கும் வடநாட்டிசையாம்.

(2) பண் தக்க ராகத்திற்கு மொத்தம் ஏழு கட்டளைகள். தக்கராகம், சோமராகம், மேகராகம், துக்கராகம், நாகராகம், அந்திராகம், கௌடிராகம் என்பவற்றில் முதல் மூன்றும தமிழ் நாட்டு இராகங்கள். இவற்றின் தற்காலப்பெயர்களாவன: 1. தக்கராகம்—காம்போதி; 2. சோமராகம்—ஹிந்தோளம்; 3. மேகராகம்—நாட்டைக்குறிஞ்சி. இம்மூன்று இராகங்களிலும் சம்பந்தரின் தக்கராகப் பதிகங்களையும், முதல் இராகத்தில் அப்பரின் பதிகத்தையும், முதலிரண்டு இராகங்களில் சுந்தரரின் பதிகங்களையும் பாடிக்கொள்ளவேண்டும். மற்ற நான்கும் வடநாட்டிசையாகும்.

(3) பண் பழந்தக்கராகத்திற்கு மொத்தம் மூன்று கட்டளைகள். பழந்தக்கராகம், சூர்துங்கராகம், மாதுங்கராகம் என்பவற்றில் முதல் பண் ஒன்றே தமிழ்நாட்டு இராகம். இதன் தற்காலப் பெயர்: பழந்தக்கராகம் — யதுகுல காம்போதி. சம்பந்தர் அப்பர் இவ்விருவர்களின் பதிகங்களையும் இந்த இராகத்திலேயே பாடவேண்டும். சுந்தரருக்கு இப்பண் இல்லை. மற்ற இரண்டும் வடநாட்டிசையாகும்.

(4) பண் தக்கேசிக்கு ஆறு கட்டளைகள். தக்கேசி, வராடி குறண்டி, திராடம், தன்னுஸி, சீவனி என்பனவற்றில் முதல் நான்கும் தமிழ்நாட்டு இராகங்கள். தற்காலப் பெயர்களாவன:— 1. தக்கேசி—முகாரி, 2. வராடி—பூர்வகல்யாணி 3. குறண்டி-கேதாரம், 4. திராடம்—சாரங்கா. இந்நான்கு இராகங்களிலும் சுந்தரரின் தக்கேசிப் பண்ணின் பதிகங்களையும், முதல் இராகத்தில் அப்பரின் பதிகத்தையும். முதலிரண்டு இராகத்தில் சம்பந்தரின் பதிகங்களையும் பாடவேண்டும். மற்ற இரண்டும் வடநாட்டுப் பண்புகளாகும்.

(5) பண் குறிஞ்சிக்கு ஐந்து கட்டளைகள். குறிஞ்சி-—சிகண்டி—செருந்தி—அழுங்கு—விபஞ்சி என்பனவற்றில் முதல் மூன்றும் தமிழ் நாட்டு இராகங்கள். தற்காலப் பெயர்கள்: 1. குறிஞ்சி—நாதநாமக்கிரியா; 2. சிகண்டி—சுருட்டி; 3. செருந்தி—காப்பி. சம்பந்தரின் குறிஞ்சிப் பண் பதிகங்களை முதல் மூன்று இராகங்களிலும், முதல் இராகத்தில் அப்பரின் பதிகத்தையும் முதலிரண்டு இராகத்தில் சுந்தரரின் பதிகங்களையும் பாடவேண்டும். மற்ற இரண்டும் வடநாட்டிசையாகும்.

(6) பண் வியாழக்குறிஞ்சிக்கு ஆறு கட்டளைகள். வியாழக் குறிஞ்சி-ஆரியவேளர்கொல்லி-பெரியவராடி-திவ்வியவராடி—சாவகக்குறிஞ்சி—முதிர்ந்த விந்தளம் என்பனவற்றில் முதலிரண்டும்

தமிழ்நாட்டு இராகங்கள். தற்காலப் பெயர்களாவன:— 1. வியாழக்குறிஞ்சி—செளராஷ்டிரம்; 2. ஆரிய வேளர்கொல்லி—கானடா. முதலிரண்டு இராகங்களின் சம்பந்தரின் வியாழக் குறிஞ்சியிலுள்ள பதிகங்களையும், முதல் இராகத்தில் அப்பரின் பதிகத்தையும் பாடிக்கொள்ளவேண்டும். சுந்தரருக்கு இப் பண்ணும் பதிகங்களும் இல்லை. மற்ற நான்கும் வடநாட்டு இசை இயக்கங்கள் ஆகும்.

(7) பண் மேகராகக் குறிஞ்சிக்கு இரண்டு கட்டளைகள். மேகராகக் குறிஞ்சி கேதாளிக் குறிஞ்சி என்பனவற்றில் முதல் இராகமே தமிழ்நாட்டு இராகம். தற்காலப் பெயர்: 1. மேகராகக் குறிஞ்சி—வசந்தா. சம்பந்தர் அப்பர் இவ்விருவர்களின் பதிகங்களை முதல் இராகத்திலேயே இசைக்கவேண்டும். சுந்தரருக்கு இப்பண்ணும் பதிகமும் கட்டளைகளும் இல்லை. மற்றது வடநாட்டிசை.

(8) பண் இந்தளத்திற்கு நான்கு கட்டளைகள். இந்தளம்—யாழ்பதம்—பைரவம்—சாங்கிமம். இவற்றுள் முதலிரண்டும் தமிழ்நாட்டு இராகங்கள். இவற்றின் பெயர்களாவன :— 1. இந்தளம்—மத்தியமாவதி; 2. யாழ்பதம்—தோடி. சம்பந்தர் சுந்தரர் இவ்விருவர்களின் இந்தளப் பண்ணின் பதிகங்களை முதலிரண்டு இராகங்களிலும், முதலிராகத்தில் அப்பரின் பதிகத்தையும் பாடவேண்டும். மற்ற இரண்டும் வடநாட்டிசைப் பண்புகளாகும்.

(9) பண் சீகாமரத்திற்கு இரண்டு கட்டளைகள். சீகாமரம், நாகத்தொனி என்பனவற்றில் முதல் பண் தமிழ்நாட்டு இராகம். அதன் பெயர் 1. சீகாமரம்—புன்னாகவராளி. சம்பந்தர் அப்பர் சுந்தரர் இம்மூவரின் சீகாமரப் பண்ணிலுள்ள பதிகங்களை புன்னாகவராளி இராகத்திலேயே பாடவேண்டும். மற்றது வடநாட்டுப் பண்புடைய இராகமாகும்.

(10) பண் காந்தாரத்திற்கு மூன்று கட்டளைகள். காந்தாரம்—பியந்தை—வியந்தம் என்பனவற்றில் முதலிரண்டும் தமிழ்நாட்டு இராகங்கள். பெயர்களாவன :- 1. காந்தாரம்-வேகடை 2. பியந்தை—கல்யாணி. சம்பந்தர் சுந்தரர் இவ்விருவரின் காந்தாரப்பண் பதிகங்களை முதலிரண்டு இராகங்களிலும்; அப்பரின் பதிகத்தை முதலிராகத்திலும் பாடவேண்டும். மற்றது வடநாட்டு இசைப்பண்புடையது.

(11) பண் நட்டராகத்திற்கு இரண்டு கட்டளைகள். நட்டராகம்—ஆனந்தை. இவற்றுள் முதற்பண்ணே தமிழ் நாட்டிராகம். பெயராவன:— 1. நட்டராகம்—பந்துவராளி. சம்பந்தர் அப்பர் சுந்தரர் இம்மூவர்களின் நட்டராகப் பண்ணின் பதிகத்தைப் பந்துவராளியிலேயே பாடவேண்டும். மற்றது வடநாட்டு இராகமாகும்.

(12) பண் காந்தார பஞ்சமத்திற்கு மூன்று கட்டளைகள். காந்தாரபஞ்சமம், தத்தளபஞ்சமம், அனுத்திரபஞ்சமம். இம்மூன்றும் தமிழ்நாட்டு இராகங்களேயாகும். இவற்றின் பெயர்கள்:– 1. காந்தார பஞ்சமம்—கேதாரகௌளை; 2. தத்தளபஞ்சமம்—வராளி; அனுத்திரபஞ்சமம்—பிலஹரி. சம்பந்தரின் காந்தாரபஞ்சமத்தின் பதிகங்களை முதல் மூன்று இராகங்களிலும், அப்பர் சுந்தரர் இவ்விருவரின் பதிகங்களை முதல் இராகத்திலும் பாடவேண்டும்.

(13) பண் கொல்லிக்கு நான்கு கட்டளைகள். கொல்லி—பாடை—தாளீ அல்லது செந்துருத்தி—நாட்டம். இவற்றில் முதல் மூன்றும் தமிழ்நாட்டு இராகங்கள். பெயர்களாவன:— 1. கொல்லி—சகானு; 2 பாடை—ஸ்ரீரஞ்சனி; 3. தாளீ அல்லது செந்துருத்தி—செஞ்சுருட்டி. சம்பந்தர் சுந்தரர் இவ்விருவர்களின் கொல்லிப்பண் பதிகங்களை முதல் மூன்று இராகங்களிலும், அப்பரின் பதிகத்தை முதலிராகத்திலும் பாடவேண்டும். மற்றது வடநாட்டிசை.

(14) பண் கௌசிகத்திற்கு இரண்டு கட்டளைகள். கௌசிகம்—கௌவாணம். இவ்விரண்டும் தமிழ்நாட்டிராகங்களேயாம். பெயர்களாவன:— 1. கௌசிகம்—பைரவி; 2. கௌவாணம்-சாவேரி. சம்பந்தர் சுந்தரர் இவ்விருவர்களின் கௌசிகப்பண் பதிகங்களை முதலிரண்டு இராகங்களிலும், அப்பரின் பதிகத்தை முதல் இராகத்திலும் பாடவேண்டும்.

(15) பண் பஞ்சமம் ஒரு கட்டளையுடையது. 1. பஞ்சமம்-உசேனி, சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவரின் பஞ்சமப் பண்ணின் பதிகங்களை உசேனி என்ற இராகத்திலேயே பாடவேண்டும்.

(16) பண் சாதாரிக்கு ஒன்பது கட்டளைகள். சாதாரீ—குச்சரீ—தேசாக்கிரீ—கொண்டைக்கிரீ—இராமக்கிரீ—மலகரீ—அருள்புரீ—சாயரீ—உதயகிரீ என்பனவற்றில் முதலிரண்டும் தமிழ்நாட்டிராகங்கள். பெயர்களாவன:— 1. சாதாரீ—மோக

ணம்; 2. குச்சரீ—ஆரபி. சம்பந்தரின் சாதாரீப் பண்ணின் பதிகங்களை முதலிரண்டு இராகங்களிலும், அப்பரின் பதிகத்தை முதலிராகத்திலும் பாடவேண்டும். சுந்தரருக்கு இப்பண்ணும், கட்டளைகளும், பதிகங்களும் இல்லை. மற்ற ஏழு கட்டளைகளும் வடநாட்டு இசைப் பண்புகளாகும்.

(17) பண் நேர்திறம் என்ற புறநீர்மைக்கு இரண்டு கட்டளைகள். நேர்திறம்—நாராயணீ. இவற்றில் முதல் பண்ணே தமிழ் நாட்டிராகம். பெயராவன:— 1. புறநீர்மை—பூபாளம். சம்பந்தர் அப்பர் சுந்தரர் இம்மூவரின் புற நீர்மைப் பதிகங்களை பூபாள இராகத்திலேயே பாடவேண்டும். மற்றது வடநாட்டு இராக இயக்கமாகும்.

(18) பண் அந்தாளிக் குறிஞ்சிக்கு ஒரு கட்டளை. 1. அந்தாளிக்குறிஞ்சி—தன்யாஸி, சம்பந்தர் அப்பர் இவ்விருவர்களின் அந்தாளிக் குறிஞ்சிப் பதிகங்களை நாட்டைக் குறிஞ்சி இராகத்திலேயே பாடுக. சுந்தரருக்கு இப்பதிகமும் பண்ணும் இல்லை.

(19) பண் பழம்பஞ்சுரத்திற்கு இரண்டு கட்டளைகள். பழம்பஞ்சுரம், தமிழ்வேளர் கொல்லி. இவற்றில் முதற் பண்ணே தமிழ்நாட்டிராகம். பெயராவன :— 1. பழம் பஞ்சுரம்—நீலாம்பரி, சுந்தரரின் பதிகங்களை இந்த இராகத்திலேயே இசைத்துக்கொள்ளுக. மற்ற இருவர்களுக்கும் இப்பண்களும் கட்டளைகளும் கிடையாது. மற்றது வடநாட்டு இராகம்.

(20) பண் சாதாளீக்கு ஒரு கட்டளை. 1. சாதாளீ—அசாவேரி. சுந்தரரின் பதிகத்தை இவ்விராகத்திலேயே பாட வேண்டும். மற்ற இருவர்களுக்கும் இப்பண் இல்லை.

(21) அப்பர் சுவாமிகளுக்குரிய நேரிசை இரண்டு கட்டளைகளும், குறுந்தொகை ஒரு கட்டளையும், தாண்டகம் ஒரு கட்டளையும் ஆக இந்த நான்கு கட்டளைகளும் முறையே சாரல், மன்றல், தாணு, காஞ்சி என்னும் வடநாட்டு இராகங்களாகின்றன. ஆதலால் இவ் விருத்தப் பாக்களை எந்த லட்சிய இராகங்களிலும் இசைத்துக்கொள்ளலாம், இப்பண்களுக்கு இப்பெயர்கள்தாம் என்பதற்கு ஆதாரமென்ன, எக்காரணங்கொண்டு இவ்வாறு கூறுகின்றனம் என்பவற்றின் வழிதுறைகள் அடுத்து வரும் கட்டுரையில் விளக்கப்படும். சம்பந்தர் அப்பர் சுந்தரர் இவர்களுக்குரிய கட்டளைகளின்படி பண்களையும் இராகங்களையும் வகைப்படுத்தி ஓர் பட்டியலும் தயாரித்துக் குறித்துள்ளனம். அதிற்றெளியலாம்.

சம்பந்தர் அப்பர் சுந்தரர் இம்மூவர்களின் பண்—பண்ணுக்குரிய கட்டளைகள்—கட்டளைக்குரிய இராகங்கள் இவற்றின் பட்டியல்.

எண்	பண்ணின் பெயர்	பண்ணுக்குரிய கட்டளை	பண்ணிற்குரிய இராகங்கள்	சம்பந்தர்க்குரிய கட்டளை	அப்பருக்குரிய கட்டளை	சுந்தரர்க்குரிய கட்டளை	21 பண்ணின் எண்கள்
1	நட்டபாடை	முதற்கட்டளை	நாட்டை	1	1	1	I
2	சாளரபாணி	இரண்டாம் ,,	ஆனந்தபைரவி	2	—	2	
3	தக்கனுதி	மூன்றும் ,,	சங்கராபரணம்	3	—	—	
4	அந்தாளிபாடை	நான்காம் ,,	கமாஸ்	4	—	—	
5	தக்கராகம்	முதற் ,,	காம்போதி	1	1	1	II
6	சோமராகம்	இரண்டாம் ,,	இந்தோளம்	2	—	2	
7	மேகராகம்	மூன்றும் ,,	நாட்டைக்குறிஞ்சி	3	—	—	
8	பழந்தக்கராகம்	முதற் ,,	யதுகுலகாம்போதி	1	1	—	III
9	தக்கேசி	முதற் ,,	முகாரி	1	1	1	IV
10	வராடி	இரண்டாம் ,,	பூர்வகல்யாணி	2	—	2	
11	குறண்டி	மூன்றும் ,,	கேதாரம்	—	—	3	
12	திராடம்	நான்காம் ,,	சாரங்கா	—	—	4	
13	குறிஞ்சி	முதற் ,,	நாதநாமக்ரியா	1	1	1	V
14	சிகண்டி	இரண்டாம் ,,	சுருட்டி	2	—	2	
15	செருந்தி	முன்றும் ,,	காப்பி	3	—	—	
16	வியாழக்குறிஞ்சி	முதற் ,,	சௌராஷ்டிரம்	1	1	—	VI
17	அரியவேளர்கொல்லி	இரண்டாம் ,,	கானடா	2	—	—	
18	மேகராகக்குறிஞ்சி	முதற் ,,	வசந்தா	1	1	—	VII
19	இந்தளம்	முதற் ,,	மத்யமாவதி	1	1	1	VIII
20	யாழ்பதம்	இரண்டாம் ,,	தோடி	2	—	2	

21	சீகாமரம்	முதற்கட்டளை	புன்னாகவராளி	1	1	1		IX
22	காந்தாரம்	முதற்	,, வேகடை	1	1	1	}	X
23	பியந்தை	இரண்டாம்	,, கல்யாணி	2	—	2		
24	நட்டராகம்	முதற்	,, பந்துவராளி	1	1	1		XI
25	செவ்வழி (பாக்கழி)	முதற்	,, காஹரப்ரியா	1	1	—		XII
26	காந்தாரபஞ்சமம்	முதற்	,, கேதாரகவுளை	1	1	1	}	XIII
27	தக்களபஞ்சமம்	இரண்டாம்	,, வராளி	2	—	—		
28	அனுத்திரபஞ்சமம்	மூன்றாம்	,, பிலஹரி	3	—	—		
29	கொல்லி	முதற்	,, சகானா	1	1	1	}	XIV
30	பாடை	இரண்டாம்	,, ஸ்ரீரஞ்சனி	2	—	2		
31	தாளி (செந்துருத்தி)	மூன்றாம்	,, செஞ்சுருட்டி	3	—	3		
32	கௌசிகம்	முதற்	,, பைரவி	1	1	1	}	XV
33	கௌவாணம்	இரண்டாம்	,, சாவேரி	2	—	2		
34	பஞ்சமம்	முதற்	,, உசேனி	1	1	1		XVI
35	நேர்திறம் (புறநீர்மை)	முதற்	,, பூபாளம்	1	1	1		XVII
36	அந்தாளிக்குறிஞ்சி	முதற்	,, தன்யாஸி	1	1	—		XVIII
37	பழம் பஞ்சுரம்	முதற்	,, நீலாம்பரி	—	—	1		XIX
38	சாதாளி	முதற்	,, அசாவேரி	—	—	1		XX
39	சாதாரி	முதற்	,, மோகனம்	1	1	—	}	XXI
40	குச்சரி	இரண்டாம்	,, ஆரபி	2	—	—		
41	யாழ்மூரி	முதற்	,, அடாணா	1	—	—		

குறிப்பு :— யாழ்மூரிப்பண் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்காக பாட்டின் இசை வீணையில் அடங்காமைக்காகப் பாடியது. இது சம்பந்தரால் கற்பனையாக வித்வத் சாமர்த்தியங்குறித்து வரப்பட்ட இராகம். இது சம்பந்தருக்கே உரித்தானது. இவற்றிலுள்ள இன்னும் சில மாறுதல்கள் பின்பு விளக்கப்படும்.

[சென்ற இதழின் தொடர்ச்சி]

தமிழர் பண்பாடு 2.

மக்களுக்காக வாழ்ந்த மன்னர்கள்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்.

"என்னையும், எனது நாட்டையும், குடிமக்களையும் இகழ்ந்து பேசிய அந்தப் பகையரசர்களை நான் சும்மா விடமாட்டேன். கொடிய போர்க்களத்திலே அவர்கள் படை அழியும்படி தாக்குவேன். அவர்களுடைய வெற்றிமுரசையும், அவர்களையும் பிடித்துக்கொண்டு வருவேன். அப்படிச் செய்யாமல் விடுவேனாயின் என்னுடைய குடை நிழலிலே வாழும் குடிமக்கள் தாங்கள் சென்று வாழ்வதற்குரிய வேறு நிழலைக் காணாமல் வருந்தி 'எமது அரசன் கொடுங்கோலன்' என்று கண்ணீர்விட்டுக் கதறி என்னைத் தூற்றும்படியான கொடுங்கோலன் ஆவேன்.

சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அரும் சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின், பொருந்திய
என்நிழல் வாழ்நர், செல் நிழல் காணாது
'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக."

(புறநா. பா. 72)

இதே கருத்தைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் கொண்டுவர வடநாட்டிற்குப் புறப்படுகின்றான். அப்பொழுது அவன், 'என்னையிகழ்ந்த வடதிசை மன்னர்களின் தலையிலே கண்ணகி சிலை செய்வதற்கான கல்லைச் சுமத்திக் கொண்டுவருவேன். அப்படிச் செய்யாமல் என்னுடைய வாட்படை சும்மா திரும்புமாயின், நான் ஒரு அரசன் அல்லன். வீரக்கழலை யணிந்து போர்க்கோலம் கொண்ட பகை வேந்தர்களை நடுங்கச் செய்யாமல், பல நன்மைகளையும் தரும் இவ்வுலகிலே, குடிமக்களை நடுங்கச் செய்யும் கொடுங்கோல் வேந்தனாவேன்" என்று சூளுரைக்கின்றான்.

"வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்,
கடவுள் எழுத, ஓர் கற்கொண்டு அல்லது
வறிது மீளும் என் வாய்வாள் ஆகின்,
செறிகழல் புனைந்த செருவெம் கோலத்துப்
பகைஅரசு நடுக்காது, பயம்கெழுவைப்பில்
குடி நடுக்குறூஉம் கோலேன் ஆகு என"

(சிலம்பு. கால்கோள்.)

மேலே காட்டிய புறநானூறு, சிலப்பதிகாரம், இந்த இரண்டாலும் மன்னர்களின்—பண்டைத் தமிழ் வேந்தர்களின்—கொள்கை குறிக்கோள்—இன்னதென்பதைக் கண்டோம்.

புலவர் பாராட்டை விரும்பிய வேந்தர்கள்

பண்டைத் தமிழ் மன்னர்களின் மற்றொரு கொள்கை அவர்களுடைய சிறப்பை எடுத்துக்காட்டும். அவர்கள் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெறுவதில் பெரிதும் ஆர்வம் காட்டினர். அக்காலத்திலே பொதுமக்களிடையிலே புலவர்களுக்கு நல்ல மதிப்பிருந்தது. அவர்கள் மன்னர்களிடமும் மதிப்புப் பெற்றிருந்தனர்.

புலவர்களால் பாராட்டிப் பாடப்பட்ட மன்னர்களையே மக்கள் உயர்ந்த பண்புள்ள வேந்தர்களாகக் கொண்டாடினர். அக்காலப் புலவர்கள், எல்லா மன்னர்களையும் பாராட்டிப் பாடல் எழுதிவிடமாட்டார்கள். ஒழுக்கமுள்ள மன்னர்களைத்தான் மகிழ்ந்து பாடுவார்கள். செங்கோல் முறை செய்யும் மன்னர்களைத்தான் சிறப்பித்துப் பாடுவார்கள். ஆகையால் அக்கால மன்னர்கள் புலவர்களின் பாராட்டைப் பெறுவதையே முதன்மையாகக் கருதினர். புலவர்களின் பாராட்டைப் பெறவேண்டுமாயின் குடி மக்களுக்குக் கொடுமை புரியாமல் நீதியுடன் ஆட்சி புரியவேண்டும். ஆதலால் மன்னர்களின் இந்த மனப்பான்மையும் அவர்களுடைய ஆட்சியின் சிறப்பை விளக்குவதாகும். இவ்வுண்மையை மேலே காட்டிய பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடலின் மற்றொரு பகுதியில் காணலாம்.

> " ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் தலைவனாக,
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
> புலவர் பாடாது வரைக என் நிலவரை "

இவ்வரிகள் பண்டைத் தமிழ் மன்னர்களின் உள்ளத்தில் கொண்டிருந்த உறுதியை எடுத்துரைப்பன. "நான் பகையரசர்களை வெற்றிகொள்ளாவிட்டால், கொடுங்கோலனாவது மட்டும் அன்றி மற்றொரு பெரும் பழிக்கும் ஆளாவேன். உயர்ந்த தலைமையும், பெரிய நூற் கேள்வியையும் உடைய மாங்குடி மருதன் என்பவனைத் தலைவனாகக்கொண்ட, உலகம் உள்ளவரையிலும் நிலைத்து நிற்கும் பலரும் புகழும் பெருமையுள்ள, புலவர்களால் எனது நாடு பாராட்டிப் பாடப்படாமல் ஒழிக" என்பதே இவ்வரிகளின் பொருள்.

புலவர்கள் பாராட்டும்படி அரசு செய்யும் நாடே சிறந்த நாடு, என்று பண்டைத் தமிழ் வேந்தர்கள் எண்ணினர். இந்த உண்மையை இவ்வரிகள் எடுத்துக்காட்டின.

பண்டைத் தமிழ் மன்னர்களிலே பலர் அறநெறியைப் பின் பற்றி நடந்தனர். மக்களைக் காப்பதே தங்கள் கடமையெனக் கருதியிருந்தனர். குடிமக்களின் பாராட்டைப் பெறவேண்டுமே யன்றி அவர்களுடைய பழிப்பைப் பெறக்கூடாது என்பதிலே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். தங்கள் நாட்டைப் பற்றிப் புலவர்கள் புகழ்ந்து பாடவேண்டும் என்று ஆவல்கொண்டிருந் தனர். மன்னர்களுக்குத் தனியாட்சி உரிமை இருந்த காலத்தி லும் அவர்கள் செங்கோல் மன்னர்களாகச் சிறந்து வாழ்ந்ததற் குக் காரணம் அவர்களுடைய உயர்ந்த குணமும், சிறந்த உள்ள முந்தான். இவ்வுண்மையை மேலே காட்டியவற்றைக்கொண்டு அறியலாம்.

புலவர்களின் பாராட்டைப் பெறக்கூடிய ஒரு நாட்டின் சிறப்பென்ன? அந்நாடு எங்கிலையிலிருக்கும்? அந்நாட்டின் ஆட்சியும், அவ்வாட்சியின் தலைவனும் எப்படி இருப்பான்? என்பவைகளை ஒரு சிறந்த செய்யுளால் காணலாம். நேர்மை யாக செங்கோல் முறையில் ஆட்சி செலுத்திய நாட்டை அப் பாடல் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

பிசிராந்தையார் என்பவர் ஒரு சிறந்த புலவர். பெரிய அரசியல் அறிஞர். அவருடைய பாடல்களிலே பல உயர்ந்த உண்மைகளைக் காணலாம். அவர் நீண்டகாலம் நோய் நொடி யின்றி உயிர்வாழ்ந்த புலவர். அவரைப்பற்றித் தமிழ் நாட்டினர் பலர் பல காலமாக அறிந்திருந்தனர். அவருடைய பெயரைக் கேள்விப்பட்டிருந்தவர்களிலே பலர், அவர் நரைத்த கிழவரா யிருப்பார் என்று நம்பியிருந்தனர். இப்படி எண்ணியிருந்தவர் களிலே சிலர், ஒருநாள் அவரை நேரே பார்த்துவிட்டனர். அப் பொழுது அவர் நரைதிரையில்லாமல் இளைஞர்போல் தோற்றம் அளிப்பதைக் கண்டு வியந்தனர். வயது பலவாகியும் நரையில் லாமலிருப்பதற்கு என்ன காரணம் என்று புலவரையே கேட்டு விட்டனர். அப்பொழுது அவர் விடையளிப்பதாக அமைந் திருக்கின்றது அச் செய்யுள்.

'வயது பலவாகியும் இன்னும் உமது மயிர் நரைக்கவில் லையே, இந்நிலை எப்படி உண்டாயிற்று? என்று கேட்பீர்க ளானல், உண்மையை உரைக்கின்றேன் கேளுங்கள். சிறந்த என் மனைவியும், மக்களும் கல்வியும் அறிவும் நிரம்பியவர்கள். ஆதலால் எனக்குக் குடும்பக் கவலையில்லை. என்னிடம் வேலை பார்க்கும் இளைஞர்கள் என்னுடைய குறிப்பறிந்து நடப்பவர்கள்.

அதாவது எனக்கும் என்னிடம் வேலை செய்வோர்க்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு அதனால் நான் செய்யும் தொழில் தடைப் படுவதேயில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் எனது நாட்டு அரசன் ஒருபொழுதும் அநீதி செய்யவேமாட்டான்; நேர்மை யாக நாட்டைக் காத்து வருகின்றான். அன்றியும் நான் வாழும் நாட்டிலே, நான் வாழும் ஊரிலே பல அறிஞர்கள் உண்டு. அவர்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள்; செருக்கின்றி அடங் கிய அறிவுள்ளவர்கள்; புலன் அடக்கமும் உள்ளவர்கள். ஆத லால்தான் நான் நரையில்லாமல் வாழ்கின்றேன். என் குடும்பம் அமைதியாக இருக்கின்றது; எனது நாடும் நல்ல அரசாட்சி பெற்று உயர்ந்திருக்கின்றது. ஆதலால்தான் நான் என்றும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றேன். கவலையற்ற இளைஞனைப்போல் காணப்படுகின்றேன்.

யாண்டுபல ஆக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதீர் ஆயின்,
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண்டனையர் என் இளைஞரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே."

(புறநா. 191)

இந்தப் பாட்டை படிக்கும்போது நமக்கு வியப்புண்டா கின்றது. இப்படி ஒரு நாடு பண்டைத் தமிழகத்தில் இருந் ததா என்று எண்ணத்தோன்றுகின்றது. இருந்ததோ இல் லையோ அதைப்பற்றி நாம் மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டாம். இப்படி ஒரு நாடு இருந்தால் அது இன்பங் கொழிக்கும் நாடாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் பாட்டு தனியாட்சி உரிமைபடைத்த மன்னர்கள் ஆண்ட காலத்திலே எழுந்த பாட்டு. இதைத்தான் நாம் எண் ணிப் பார்க்கவேண்டும். பண்டைத் தமிழ் மன்னர்கள் எல்லா மக்களும் கல்வி கற்றிருக்கவேண்டும்; வேலைக்காரர்களும், தலைவர் களும் ஒத்து வாழவேண்டும்; அறிவும் அடக்கமும் ஒழுக்கமும் பொருந்திய சான்றோர்களின் அறிவுரைப்படி ஆட்சி நடைபெற வேண்டும்; என்று நினைத்தார்கள்; இதற்காக முயன்றார்கள்; என்பதற்கு இப்பாடலே சான்றாகும். பண்டைத் தமிழரசர் களிலே சிறந்த மன்னர்கள் பலர் இருந்தனர் என்பதற்கு இப் பாடலும் ஒரு எடுத்துக்காட்டு.

சரிகா பாகா; சாதா பாகா.

வித்துவான் வீ. உலகவூழியன்,
தமிழ் விரிவுரைஞர், சேலங்கல்லூரி.

இஞ்சிசூழ் தஞ்சைமா நகர்க்கு வடபால் ஏழுகல் தொலைவில் இருக்கும் ஊர் திருவையாறு. இப்பழவிறல் நகரம் முத்தமிழறிஞர் களை என்றுந் தன்பால் கொண்டிலங்குவது. காசி நகரம் வடமொழி யறிஞர்களையுடைமையால் பெயர்போயது என்பர். அந்நகரத்து அம்மொழியறிஞர்களும் திருவையாற்றிற்கு வந்து தம் ஐயத்தினை அம்மொழிவல்ல அறிஞர்பால் வினவி அதனை நீக்கிக்கொள்ளும் பெருமையுடையதென்று வரலாற்றறிஞர் இந்நகரத்தினைப் புகழ்வர். இசைத் தமிழறிவிற் சிறந்த அறிஞர்கள் இன்றும் அந்நகரத்துளர். இந்நகரம் இசையால் திசைபோகுந் திறத்தினை இன்று பெற்றி ருத்தல்போலவே முன்னரும் பெற்றிருந்ததென்பதனை "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று இற்றைக்கு ஆயிரத்திருநூறு யாண்டுகட்கு முன்பே திருநாவுக்கரசு நாயனார் தம் அருமைத் திரு வாயால் அவ்வூரிறைவனைப் பாராட்டுதலால் நாம் அறியலாம். அன்றியும் திருஞான சம்பந்தப் பிள்ளையார் 'காந்தாரம் இசைய மைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார்வீதித்-தேந்தாம் என்றரங் கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே' எனவும், 'வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்-சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே' எனவும், 'காரோடி விசும்பளந்து கடிநாறும் மொழிலணைந்த கமழ்தார் வீதித்—தேரோடும் அரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறே' எனவும் பாடுதலால் இந்நகரில் இசையும் நாட கமும் இன்றமிழோடு இசைந்து இன்பந் தந்த இயல்பினை நாம் இனிது உணர்கின்றோம். மூன்று தலைமுறைக்கு முன்பு தியாகையர் அவர்கள் தெலுங்கில் இனிய இசைப்பாக்களை இயற்றித் தாமே அவற்றைப் பாடி இசைவாணர் கொண்டாடவும், 'சுந்தரத் தெலுங் கினில் பாட்டிசைத்துத் தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்' எனச் சுப்பிரமணிய பாரதியார் பாடவும் தெலுங்கு மொழிக்கு ஒரு பெருமையைத் தேடித் தந்தார். அவ்விசைக் குரவர் இனிது வாழ்ந்த இடம் திருவையாறு என்பதனை அறியாதார் இசை யறியாதாரே.

ஏறக்குறைய இருநூறுண்டுகட்கு முன்பு இவ்வூரகத்துச் சுப்பு வையர் எனப் பெயரிய இசைக்குரவர் வாழ்ந்து வந்தார், இவரை ஆறுகால்ம் சுப்புவையர் என இசையறிஞர் அழைத்து வந்தனர்.

இதனாலும் மக்கள் வாழ்வுக்கும், நாட்டின் நன்மைக்கும் அரசாட்சியே அடிப்படை என்பதைக் காணலாம். தனியாட்சி முறை வெற்றியுடன் நடைபெற்றதற்கு அவ்வாட்சித் தலைவர்க ளின் அரிய பண்புகளே காரணம்; அருங்குணங்களே அப்பழுக் கற்ற நடத்தைக்கு அடிப்படை; என்ற உண்மையையும் உண ரலாம்.

ஓரெழுத்துக்கு (அட்சரத்திற்கு) முப்பத்திரண்டு கேள்விகள் (சுரங்கள்) அமையுமாறு பாடுகின்ற திறம்பற்றி இவரைச் சட்காலம் சுப்புவையர் என்பர். அன்றியும் இவர் குரல் ஐந்து நிலையிலும் (பஞ்சஸ்தாய்) பாடுதற்கேற்ற அமைப்புடையதாயிருந்தது என்று அறிஞர் பாராட்டுவர். மூன்று காலத்தில் மூன்று நிலையில் பாடு தலையே பெரிய பேறு என இக்காலத்து இசையறிஞர் கருதுவர்; இன்னோர் சும்புவையரைப்பற்றி யாம் எழுதுவதனைப் புனைந்துரையாகக் கருதுவரேயன்றி உண்மை நவிற்சியாகக் கொள்ளார். எனினும் யான் ஈண்டு எழுதுவது உண்மையேயாம். இவ்விசையறிஞரிடத்து இசைக்கலை ஏற்றத்துடன் இருந்ததுபோலவே இனிய குணங்களும் இசைந்திருந்தன. கலையறிஞர்பால் — அருங்கலையறிஞர்பால் வறுமை குடிகொண்டிருப்பது அற்றைக் காலத்துப் பெரு வழக்கமாகவிருந்தது. அக்காலவறிஞர்க்கும் அக்காலவறியர்க்கும் வேறுபாடு ஞகர யகரமே. மொழிநூல் அறிஞர் கருத்துப்படி ஞகர யகரங்கள் தம்முள் இனமாந் தொடர்புடையனவே. யான்; ஞான்; மண்யாத்த கோட்டமழகளிறு, மண் ஞாத்த கோட்ட மழகளிறு என்னும் இலக்கண வழக்காறு இவ்வுண்மையை மெய்ப்பிக்கும். தாம் பயிலும் கலையின்பத்தில் மயங்கிப் பொருளைப் பெறுதற்குக் காலத்தொடு முயலாது அக்கால முழுவதிலும் கலைப்பேற்றையே தேடுதலால் பொருட்பேறின்றித் துன்புறுதல் அருங்கலையறிஞர்க்கு இயல்பாயிற்று. இந்நிலை அவர் எய்துதல் அவர்தங் குற்றமே. இதனை அவர் உணரராரல்லர். எனினும் பொருட் செல்வத்தினும் கலைச் செல்வத்தினைத் தேடிப் பெற்றுத் துய்த்தலையே தம் வாழ்வின் பயனாக அன்னார் நம்பினர் அத்தகையோர்க்கு நம் சுப்புவையரும் விலக்கல்லர். இறையன்பும், இயற்றமிழ்ப் புலமையும், நுண் மாண் நுழை புலமும், தன்மானமும் இவர்பால் உடன் உறைந்தன. அக்கால முறைப்படி உயரிய புரவலர் ஐயரவர்களைக் கேட்டுக் கொண்டாற் பாடுதலன்றித் தாமே அவையிலோ அன்றித் தனி மனிதன் முன்னிலையிலோ பாடும் வழக்கமும் அறவே இல்லாதவர். கடவுள் வழிபாட்டின்போதும், கலைப் பயிற்சியிலும், கற்பித்தற்கண்ணும் தாமே பாடும் வழக்கம் உடையவர். அருங்கலையறிஞர்க்கு நெருங்கிய கிழமைத் தொடர்புடைய வறுமை இவரைத் தேடிவந்து கொண்டிருந்தது.

இவர் இன்னணம் வாழ்ந்து வருங்காலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தினைச் சேர்ந்த உடையார்பாளையத்துக் குறுநில மன்னர் ஒருவர் இருந்தார். அவர் தம்பின் உடையார் யுவராச பூபதி என அழைக்கப்பட்டார். இவ் யுவராச பூபதியார் இசைக்கலையிலும், இயற்றமிழிலும் துறைபோயவர்; கொடைவள்ளல். எத்துணைச் சிறப்புடைய இசையறிஞரும் இவர் முன்னிலையில் தந் நிலை தளர்வர். இசைக்கலையிலக்கண அறிவிலும் இசைப் பயிற்சியிலும் துறைபோகிச் சிறப்புற்றவர். தம் நாளோலக்கத்தை அடைந்த இசைப் புலவர் தாமே தம்மை யறிமுகப்படுத்திக்கொண்டு இசைப்பா இயம்பக்கேட்டு அவர் தம் இசையிற் குறைவுண்மை கண்டு குறையை

அவர் ஒப்புக்கொள்ளும் முறையில் அவர்க்கு எடுத்துக் கூறுவர். அவர் விரும்பிய பொருளை நிறையத்தருவர். ஆனால் தலையசைத்து, இசை நன்றாக இருக்கின்றது என்று கூறுதல் எஞ்ஞான்றும் இவர்பால் இல்லை. தம்மை நாடிவந்த இசையறிஞர் தாமே பாடக் கேட்பரேயன்றித் தாம் அவரைப் பாடுமாறு கேட்டுக்கொள்ளும் வழக்கம் இவர்பால் என்றும் இல்லை.

திரு. சுப்புவையர் அவர்களை வறுமை நலியத் தொடங்கிற்று. வறுமையால் வாடும் மனைவி முதலியவர்களுடைய துன்பத்தினை நீக்க வழிதேடினர்; அவ்வழி ஒன்றும் புலப்படவில்லை. இறுதியில் யுவராச பூபதியை அடைந்து பரிசில்பெறக் கருதினர். திருவை யாற்றினை நீங்கி வடக்கு நோக்கி நடந்து கொள்ளிடம் கடந்து உடையார்பாளையம் அடைந்தனர். ஐயரவர்கள் தம்மை நாடிவந்த மையையறிந்த குறுநிலமன்னர் அவரை வரிசையறிந்து வரவேற்று உயரிருக்கையளித்து உசாவி அளவளாவி மகிழ்ந்தனர். குரிசிலும் அவரைப் பாடுமாறு கேட்டுக்கொள்ளவில்லை. இசைக்குரவரும் பாடவில்லை. இருவருந் தத்தங் கொள்கையில் இம்மியளவும் இறங்கினரில்லை. எனினும் பூபதி ஐயருக்குத் தனி விடுதியமைத்துத் தந்து எந்தக் குறைபாடும் இல்லாமல் உணவு முதலிய பொருள்களையெல்லாம் குறைவறக் கொடுத்து வந்தனர். ஐயாற்றில் உறையும் ஐயர் குடும்பத்திற்கு வேண்டிய பொருளையும் ஐயருக்குத் தெரியாதவாறு உய்த்தனர். ஒவ்வொருநாளும் ஐயரை அவைக்கு வரவழைத்து அவருடன் இசைக்கலை யிலக்கணம்பற்றிய உரையாடல் நிகழ்த்துதலை மேற்கொண்டனரேயன்றி உடையார் ஐயரைப் பாடச் சொன்னாரில்லை. ஐயரும் பாடினாரில்லை.

ஒருநாள் ஐயர் தம் விடுதியில் பகலுணவின்பின் இளைப்பாறப் படுத்தனர். அவர் தம் உள்ளம் அலையத் தொடங்கிற்று; அது அலைந்ததுமாத்திரமன்றி ஐயரையும் அலைக்கத் தொடங்கிற்று.

"வீட்டினை நீங்கி வந்து பல நாட்களைக் கழித்தேன். யான் புறப்பட்டு வரும்போது இரண்டு நாளுக்குப் போதிய உணவுதானே இருந்தது. நான் இனிதே இங்கு பொழுதுகழிக்கும் இந்நாளெல்லாம் என் மனைவி எப்பாடு படுவளோ? அடுத்த வீட்டுக்காரரும் உதவி செய்யமாட்டாரே. பொருளில்லார் கேட்டனவற்றை அண்டை அயலார் தந்து நிரப்புதல் வழக்கமில்லையே. உதவி செய்தற்குண முடைய நெருங்கிய உறவினரும் இல்லையே. என் மனைவி என்னைப் பற்றி என்ன எண்ணுவாளோ? வறுமைக் கொடுமை தாங்கமாட்டாமல் ஒருகால் மானத்தால் உயிரை விட்டாளோ? பசி தின வாடி மெலிந்து குற்றுயிரளாயவதிப்பட்டு என்னை நொந்து மாழ்குவாளோ? மூய்திறந்தாற்றுதல்போல் தன் துன்பத்தினைச் சொல்லியாற்றுதற்கும் உடல் வன்மையிலளே. ஏனையோர் நிலையினைப்பற்றி யான் எண்ண என்ன உண்டு? விரைவிற் பொருள் பெற்று மீளுவன் எனக் கூறிப் போந்த யான் அது செய்திலனே, ஐயகோ! இசையிற்றுறைபோகிய இப்பூபதியைக் கொடை வள்ளல் எனப் பலருங் கூறியதனை மெய்யென்றே யான் எண்ணினனே. இவர் தோற்றத்

றத்தில் கொடையாளர் போலவே காணப்படுகின்றார். என்றாலும் என்பால் அதனைக் காட்டவில்லையே! யான் மாத்திரம் உண்டு காலம் போக்குதல் நல்லியலறமாகுமா? முறையாகுமா? சான்றோர் முன்னிலையில் அன்று இன்பத்திலும், துன்பத்திலும் பங்குகொண்டு பிரியாது ஒழுகுவேன் என்று உறுதிமொறி கூறிக் கைப்பிடித்தயான் எக்குற்றமும் கருதாத என் மனைவியை இன்று துன்பக் கடலுள் அலையவிட்டுப் பிரிந்து யான் மாத்திரம் உண்ணும் உணவு உண வாகுமா? அந்தோ! இவ்வுடையாரை நம்பி வந்தேனே; என்னோடு உனிய முறையில் உசாவுகின்றாரேயன்றி ஒருநாளும் என்னைப் பாடச்சொன்னாரில்லையே. இன்று யானே வலியப் பாடிப் பரிசில் பெற்றுக் செல்லலாமா? சீச்சீ என்ன துன்பம் நேர்ந்தாலும் கொள்கையிலிருந்து தவறுதல் கூடாதன்றே' என்று பலவாறு சிந்தித்துக் கிடந்தனர். இறுதியில் உடையாரை நீங்கிச்சென்று வேறு யாரிடமேனும் பரிசில் பெற்று வீடு செல்லலாம் எனத் துணிந்தணர். அன்று மாலையில் வழக்கம்போல் உடையார் பூபதி யுடன் கொஞ்சநேரம் உரையாடிய பின்னர்த் தாம் விடை வேண் டினர். குறுநில மன்னரும் சிறிது தயக்கத்துடன் விடை நல்கினர். ஐயர் தம் விடுதியையடைந்தனர்.

உடையார் குதிரைச் சேவகன் ஒருவனை விளித்து ஐயர் நாளை வைகறைப் பொழுதில் எழுந்து எத்திசை நோக்கிச் சென்று காலைக் கடன் கழித்தபின்னர் யாண்டு நீராடுகின்றனர் என்பதனை அவ ரறியாவகை அவரையொற்றிப் பரியிற் சென்றறிந்து விரைந்து வந்து தமக்குத் தெரிவித்தல் வேண்டும் எனக் கட்டளையிட்டு, தம் புரவியைப் பண்ணமைத்திருக்குமாறு தம் பரிப்பாகனுக்கு ஆணை தந்து இரவு துயிலச் சென்றனர்.

மறுநாள் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்து ஐயர் வடக்கு நோக்கிச் சென்று மூன்று கல் தொலைவில் உள்ள ஒரு பொய்கை யருகில் காலைக்கடன் கழித்து நீராடத் தொடங்கினர். இந்நிகழ்ச்சி யைக் குதிரைச் சேவகனால் அறிந்த பூபதியார் விரைபரி யிவர்ந்து சென்று குறியிடம் அணுகிக் குதிரையினின்றும் இழிந்து அதனை ஒரு மறையிடத்துப் பிணித்துவைத்துப் பொய்கைக் கரைத் தாழை வேலிச் சிறைப்புறத்து மறைந்திருந்தனர். அந்நிலையில் ஐயர் நீராடி இறை வழிபாடியற்றி முடிவில் ''அருச்சனை பாட்டேயாகும்'' என்னுந் திருவாய் மொழிக்கேற்பப் பாடத் தொடங்கினார். அவர் தன்னை மறந்து இசையிலிசைந்து தலைவனொடொன்றித் தானும் இசையும் வேறாகாமலிருந்தனர். அவ்விடைப் பூபதியாரைக் காணப் பெறாமல் புரவி கனைத்த திடீர் ஒலி ஐயரை ஒருநிலைக் கூட்டத்தி லிருந்து நீக்கத் தன்னுணர்வு தோன்றிய அவர் தம் இசைப்பா இன்பத்தைத் துய்த்த நிலையில் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் பேருரைக் கியைய 'இப்பொழுதன்றோ யுவ ராசபூபதி கேட்டல் வேண்டும்' என்று கூறினர். 'கேட்டுக் கொண்டுதானே இருக்கின்றேன்' என எழுந்தது பிறிதொரு குரல். அவ்விடையைச் செவியேற்ற ஐயர் திகைத்தனர் திசை நான்கும்

கண்பரப்பி விழித்தனர். பூபதி அவர் கண்முன் நின்றனர். இருவரும் எல்லை கடந்த இன்பத்தினராய் ஒருவரை ஒருவர் தழுவினர். 'பூபதியாரே, கொள்கையில் தோற்றேன் நான்; நீரே வென்றீர்' என்றனர் ஐயர். உடையார் அவரை இறுகத் தழுவியெடுத்துத் தம் புரவியில் அமர்த்தி ஏறி இவர்ந்து அரண்மனை எய்தினர். அவையில் ஐயரை இருத்திப் பாடுமாறு கேட்டுக்கொண்டனர். ஐயரும் பாடுவாராயினர்.

ஐயர் பாடிய பல்லவிப் பண்களையும், அவை தம் திறங்களையும் பிறழாவாறு சிறப்புத் தோன்ற உடையாரும் பாடினர். இருவரும் ஒருவர்க்கொருவர் தளராராய் ஓங்கிய நிலையில் கேட்டோர் இறும்பூதெய்த இசைப்பா இயைம்பினர்.

ஐயர் ஆரோசையில் கேள்வியும் (சுரமும்) பொருளும் சிறக்க ஐந்து கேள்வித் திறமாகிய (ஔடவராகம்) மோகனத்தில் 'சரிகா பாகா யுவராசா' எனப் பல்லவி இசைத்தனர். யுவராசர் தம் தலையில் சரிகைப் பாகையணிந்திருக்கின்றனர் என்ற குறிப்பு வெளிப்படும் நயந்தோன்ற இவ்வாறு இசைத்தனர். ஆனால் பூபதியார் அணிந்திருந்தது சரிகையில்லாத தலைச்சாத்தே. ஆதலால் அதே மோகனத்தில் அமரோசையில் யுவராசர் 'சாதாப் பாகா' எனப் பாடிப் பொருட் குறிப்புக் கருத்தினை மறுத்தனர். அப்போது உள்ளத்தில் நிறைந்து பொங்கியெழுந்து வழிந்த மகிழ்ச்சியால் ஐயர் துள்ளியெழுந்து உடையாரைக் கட்டித் தழுவி "நீர் தோலா நாவின் மேலீராயுள்ளீர்; உம்முன் யான் என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்" என்றனர். அரசர் அவர் அவ்வாறு கூறுதல் தகாது என அவரை மிகமிக மெச்சினர். பின்னர் ஐயர் தம் விடுதியை அடைந்தனர்.

இசைக் குரவராகிய ஐயரைப் பெருமைப் படுத்தற்பொருட்டு அன்று பிற்பகல் பூபதியார் ஐயரின் விடுதிக்கு எழுந்தருளினர். அப்போது அயர்ச்சியால் ஐயர் கண்வளர்ந்துகொண்டிருந்தனர், அந்நிலையில் அவர் மூச்சுக்காற்று இன்னிசைப் பண்ணாக இயங்கிக் கொண்டிருந்தது. இச்சிறப்பினைப் பூபதி கண்டு வியந்து தன்னை மறந்து சிலைபோல் நின்றனர் துயிலுணர்ந்த ஐயர் உடையாரைக் கண்டு வணங்க ஒருவரை ஒருவர் தழுவிக் கழிபேருவகை கூர்ந்தனர்.

மறுநாள் பூபதியார் ஐயர்க்குப்

"பலக்குஞ்சரமும் செயநாடும் பரியுமணியு மாடைகளும்
பலக்குஞ்சரமும் செயநாடும் பரியுமணியு மாடைகளும்"

அளித்து வழிவிடுத்துப் புலவரை நினைந்திருந்தனர்.

இவ்வரலாற்றுச் சுருக்கத்தினை முப்பதாண்டுகட்கு முன்பு ஒரு மாலை வேளையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கட்டிடத்தில் எனக்குச் சுவைபடக் கூறியவர் பெரியார் இயலிசைத் தமிழறிஞர் காலஞ்சென்ற உயர்திரு. கூடலூர் இராமச்சந்திர வன்னியர் அவர்கள்.



படப்பிடிப்பு—வியாஸ், தஞ்சை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திரன் செப்பேடுகளில் ஒரு பக்கம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் — போட்டோ—வியாஸ்.

முதல் இராசேந்திர சோழனின் செப்பேட்டு வளைய முகப்பு.